மலர்-4 இதழ்-85 மார்ச் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play



மனித மூளையின் உள்ளுணர்வே **கடவுள்**

இலவச e- book

# மூன்றுவிதமாக மாறும் காயத்ரி மந்திரம்

# விநாயகர் விக்னேஷ்வரன் ஆன சரிதம்



விக்கினன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான். பொதுவாக, அசுரர்கள் அரக்க குணம் உடையவர்கள்.

அவர்கள் தான் எல்லாவற்றிலும் முதலில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். ஆதலால் அவர்கள் தேவர்களையும், முனிவர்களையும் தொல்லை கொடுத்துவந்தனர்.

அசுரர் குலத்தில் பிறந்த விக்கினன் மட்டும் மாறுபட்டவனா? அவனும் தேவர்களை துன்புறுத்தி வந்தான். அவன் தொல்லையை பொறுக்க முடியாத முனிவர்களும், தேவர்களும் விநாய பெருமானிடம் சென்று அவனிடமிருந்து தங்களை காக்கவேண்டி சரணடைந்தனர். விநாயகரும் அவனை அழிக்க புறப்பட்டார்.

விநாயகர் சிறு பிள்ளைதானே! அவரால் என்ன செய்து விடமுடியும்? என ஏளனமாக இருந்த விக்கினன், பிறகு விநாயகரிடம் மன வலிமையிலும், உடல் வலிமையிலும் தோற்று போய், கடைசியில் தன்னை மன்னித்து அருள்புரியுமாறு சரணடைந்தான்.

விநாயகர் அவனை மன்னித்தார். அவன் விநாயகரிடம், "நீங்கள் என் பெயரை முதலில் சூட்டி கொள்ள வேண்டும். அதுதான் என் ஆசை" என்று வேண்டுகோள் விடுத்தான். விக்கினன் கேட்டுக் கொண்டபடி, அன்று முதல் விநாயகர் ‘விக்னேஸ்வரன்’ என்று அழைக்கப்பட்டார்.

# மணி அடிக்கும் முறை



மணியை எப்போதும் ஒரே மாதிரியாக அடிக்கக் கூடாது.

மெதுவாக அடித்தால் அர்க்யபாத்யதிகள் சமர்ப்பிக் கப் படுகிறது என்று அர்த்தம்.

கணகணவென்று அடித்தால் தூபம், தீபம் ஆகிறது என்று அர்த்தம்.

இரண்டு பக்கமும் விசேஷமாக அடித்தால் திருமஞ்சனம் நடக்கிறது என்று அர்த்தம்.

மெதுவாக அடித்தால் பகவான் அமுது செய்கிறான் என்று அர்த்தம்.

மணியின் தொனியை வைத்தே கோவிலில் என்ன நடக்கின்றது என்று தெரிந்து கொள்ளலாம்.

மணியை வலது கையில் எடுத்து, இடது கையில் மாற்றிக்கொண்டு கற்பூர ஆரத்தித் தட்டை எடுக்க வேண்டும்.

பிறகு இடது கையிலிருந்து வலது கைக்கு மாற்றிக் கொண்டு கீழே வைக்க வேண்டும்.

இடது கையால் மணியை எடுக்கவே கூடாது.

கண்டை என்பது சாமான்யமல்ல. அதில் பிரணவம் த்வனிக்கிறது. தேவதைகளை வரவழைக்கிறது. துஷ்ட ப்ரக்ருதிகளை ஓட்டுகிறது.

பகவானுக்கு அமுது காணும்போது நிசப்தமாக இருக்க வேண்டும். அமங்கலமான பேச்சுகள் காதில் விழக்கூடாது. மணி அடித்தால் அவை காதில் விழாது.

www.aanmeegamalar.com





# அபகரித்த சொத்துகளை மீட்க உதவும் சிவன்

சொத்து தகராறு, மற்றவர்களால் சொத்துக்கள் அபகரிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஆடுதுறை எனப்படும் தென்குரங்காடுதுறையில் வீற்றிருக்கும் “ஆபத்சகாயேஸ்வரர்" திருக்கோவிலுக்கு சென்று வழிபடவேண்டியது அவசியமாகும்.

இத்தலத்து ஈசனை குறித்து சம்பந்தரும், நாவுக்கரசரும் பாடியுள்ளனர். வாலியால், துரத்தப்பட்ட சுக்ரீவன், இத்தலத்து ஈசனான “ஆபத்சகாயேஸ்வரரர் முன் மனமுருகி வேண்டினார், இதன் காரணத்தால்தான், ஸ்ரீராமரின் அருள் கிடைத்து.

தொடர்ந்து இத்தலத்து ஈசனை வழபட்டதால், தான் இழந்தசெல்வங்கள் அனைத்தையும் பெற்றான். வானராமகிய சுக்ரீவனால் பூஜிக்கப்பட்டதால்,இத்தலம்“தென்குரங்காடுதுறை “ என்றானது. கும்பகோணமிருந்து மாயவரம் செல்லும் சாலையில் சுமார் 25 கி.மீ. தொலைவில் இத் திருக்கோயில் அமைந்துள்ளது.

# சிவன் தலத்தில் உள்ள பெருமாள்





சிவாலயங்களில்பெருமாளுக்கு சன்னதி இருப்பதை பெரும்பாலும் பார்த்திருப்போம், ஆனால் பெருமாள் கோவில்களில் சிவனுக்கு சன்னதி இருக்காது, இதற்கு வாரியார் தெளிவான விளக்கம் கூறியுள்ளார், "அண்டாவிற்குள் குண்டா போகும், குண்டாவுக்குள் அண்டா போகாது" என்று விரிவான விளக்கமே கொடுத்துள்ளார், சிவன் அகிலம் போன்றவர், அவருக்குள் அனைத்தும் அடக்கம், அதனால்தான் பெரும்பாலான சிவன் கோவில்களில் பெருமாளுக்கு இடம் இருக்கும். விஷ்ணுவக்கு தனி சந்நிதி உள்ள சிவாலயங்களைப் பார்ப்போம்.

1. திருவோத்தூர் – ஆதிகேசவப் பெருமாள்
2. கச்சி ஏகம்பம் – நிலாத்துண்டப் பெருமாள்
3. கொடிமாடச் செங்குன்றூர் – ஆதிகேசப் பெருமாள்
4. சிதம்பரம் – கோவிந்தராஜப் பெருமாள்
5. திருநணா – ஆதிகேசவப் பெருமாள்
6. சிக்கல் – கோலவாமனப் பெருமாள்
7. திருநாவலூர் – வரதராஜப் பெருமாள்
8. திருநெல்வேலி – நெல்லை கோவிந்தர்
9. திருப்பழனம் – கோவிந்தர்
10. பாண்டிக் கொடுமுடி – அரங்கநாதர்
11. திருப்பத்தூர் – அரங்கநாதர்
12. திருவக்கரை – அரங்கநாதர்

www.aanmeegamalar.com

# ஐந்து வகையான உணவு தோஷங்கள்

உணவு என்பது வயிறு நிரப்பவும், சுவைக்கு மட்டும் அல்ல, அது நமது மனதுடனும் நமது செய்கையுடனும் சம்பந்தப்பட்டது.

இதுபோன்று உணவுகள் மூலம் சில தோஷங்கள் கூட ஏற்படும் என்பதை நமது முன்னோர் வகுத்து வைத்திருந்தனர், இதனால்தான் அடுத்தவர் வீடுகளில் சாப்பிடும்போதும், வெளியிடங்களில் உணவு உண்பதிலும் மிக கவனமாக இருந்தார்கள்.

உணவு பரிமாறுபவர்கள், உணவு சமைப்பவர்கள், உணவு உண்ணும் வீடு போன்றவற்றின் நிலையை நன்கு அறிந்திருந்தால்தான் அந்த வீடுகளில் உணவை ஏற்பவர்களாக இருந்தார்கள்.

இல்லையென்றால் பசியே இருந்தாலும் உண்ணாமல் தவிர்த்தார்கள். காரணம் உணவு தோஷம் ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்தே சில இடங்களில் உணவுகளை தவிர்த்தனர்.

ஆனால் நாம் இன்று ருசிக்கும், சுவைக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, இடம், பொருள், ஏவல் என்பதை கணக்கில்கொள்ளாமல் உணவுகளை உண்கிறோம், இதனால் நமக்கே தெரியாமல் ஒருசில தோஷங்கள் உண்டாகின்றன.

அந்த தோஷங்களைப் பற்றி பார்ப்போம். உணவில் ஐந்து தோஷங்கள் உண்டு.

1 அர்த்த தோஷம்
2 நிமித்த தோஷம்
3 ஸ்தான தோஷம்
4 ஜாதி தோஷம்
5 சம்ஸ்கார தோஷம்

## அர்த்த தோஷம்

பண்டிதர் ஒருவர் தனது சீடர் ஒருவரின் வீட்டிற்கு உணவருந்த வந்தார். உணவருந்தி முடியும் போது அவரது வாடிக்கையாளர் ஒருவர் பணம் நிரம்பிய மூட்டை ஒன்றை சீடரிடம் தந்தைதப் பார்த்தார்.

உணவருந்தி முடிந்து தனியே அறையில் இருக்கும் போது அவருக்கு பணத்தாசை தோன்றியது. சீடருக்கு வந்த பைக்குள் கைவிட்டு கை நிறைய பணத்தை எடுத்துக் கொண்டார். பின்னர் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார்.

மறு நாள் காலையில் பூஜை செய்யும் போது முதல் நாள் தான் செய்ததை நினைத்துப் பார்த்தார். அடடா,என்ன தவறு செய்து விட்டோம், இந்தத் தவறை நான் எப்படி செய்தேன் என்று நினைத்து வருந்தினார்.

பணத்தை எடுத்துக் கொண்டு நேரடியாகத் தன் சீடனின் வீட்டிற்குச் சென்றார். நடந்ததைச் சொல்லி தான் எடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.



சீடனின் வீட்டில் உணவருந்திய பின்னர் இந்தக் கெட்ட எண்ணம் தோன்றியதும் இரவில் அது ஜீரணமாகி கழிவுகள் வெளியேறிய பின்னர் மனம் பரிசுத்தம் ஆனதையும் அவர் நினைத்துப் பார்த்தார்.

தன் சீடனிடம், 'நீ சம்பாதித்த பணம் எப்படி வந்தது' என்று கேட்டார்.

வெட்கமடைந்த சீடன் தான் நேர்மையற்ற வழியிலேயே பணம் சம்பாதிப்பதாக ஒப்புக் கொண்டு மன்னிப்பும் கேட்டான்.

இது பொருளால் வரும் தோஷம் அதாவது அர்த்த தோஷம்! அர்த்தம் என்றால் பொருள் என்று அர்த்தம்.

நாம் சமைக்கும் உணவுப் பொருள்கள் நியாயமான சம்பாத்தியத்தில் வாங்கியதாக இருத்தல் வேண்டும்.

## நிமித்த தோஷம்

உணவைச் சமைக்கும் சமையல்காரர் நல்ல மனதைக் கொண்டிருத்தல் அவசியம். நேர்மையானவராகவும், அன்பானவராகவும் நல்ல் சுபாவம் உடையவராகவும் அவர் இருத்தல் வேண்டும்.

அத்தோடு சமைக்கப்பட்ட உணவு நாய், எறும்பு, பல்லி, காகம் போன்ற ஜந்துக்களால் தொடப்படாமல் இருத்தலும் அவசியம். அப்படித் தொடப்பட்ட உணவுகள் அசுத்த மானவை.

உணவில் தூசி, தலை மயிர், புழுக்கள் போன்றவையும் இருக்கக் கூடாது.

பீஷ்மர் 27 நாட்கள் அம்புப் படுக்கையில் இருந்தார். கிருஷ்ணரும் பஞ்ச பாண்டவர்களும் அவரைச் சுற்றி இருந்தனர். திரௌபதி மனதிற்குள் தன்னை சபையில் துரியோதனன் ஆடையை அவிழ்க்க உத்தரவிட்ட போது இந்த பீஷ்மர் வாயை மூடிக் கொண்டு ஏன் இருந்தார் என்று எண்ணினாள். அவளது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட பீஷ்மர், "அம்மா, நான் துரியோதனனது ஆதரவில் அவனால் படைக்கப்பட்ட உணவை சாப்பிட்டு வந்தவன். என் அறிவை முற்றிலுமாக அந்த உணவு மறைத்து விட்டது. இதோ இந்த 27 நாட்களில் சாப்பிடாமல் இருக்கும் போது என் பழைய ரத்தம் சொட்டுச் சொட்டாக வெளியேறும் போது நான் பரிசுத்தனாகிறேன். எனது அறிவு பிரகாசிக்கிறது" என்று கூறினார்.

அசுத்தமான உணவு அனர்த்தத்தையே விளைவிக்கும்.



தீயவன் சமைத்த உணவு தீமை யான எண் ணங்களையே உரு வாக்கும். நல்லவன் சமைத்த உணவு நல்ல எண்ணங்களையே உருவாக்கும்.

## ஸ்தான தோஷம்

எந்த இடத் தில் உணவு சமைக்கப் படுகி றதோ அங்கு நல்ல அதிர்வுகள் இருத்தல் அவசியம். சமைக்கும் போது அனாவசிய சண்டைகள், அற்ப விவா தங்கள் நடந்தால் அந்த உணவு அசுத் தப்பட்டு விடும்.

அதுமட்டுமின்றி கழிப்பறை, மருத்துவ மனை, யுத்த களம், கோர்ட் ஆகியவற்றின் அருகே சமைக்கப்படும் உணவும் சாப்பிடுவதற்கு உகந்தது அல்ல.

துரியோதனன் 56 விதமான விசேஷ உணவு வகைகளைத் தயாரித்து கிருஷ்ணரை சாப்பிடக் கூப்பிட்டான். அவரோ மறுத்து விட்டார். அவரை சிறைப்பிடிக்கவும் அவன முயன்றான். ஆனால அவரோ நேராக விதுரன் வீட்டிற்குச் சென்றார். அவரைப் பார்த்த விதுரரின் மனைவி புளகாங்கிதம் அடைந்தாள்.

எதைத் தருகிறோம் என்பதே தெரியாமல் வாழைப்பழத்தை உரித்து பழத்தைத் தூக்கி எறிந்து விட்டு தோலை அன்புடன் கிருஷ்ணருக்குத் தந்தாள். அதை வாங்கித் தின்ற கிருஷ்ணர் ஆனந்தமுற்றார்.

இதைப் பார்த்துப் பதறிப் போன விதுரர் மனைவியை நோக்கிக் கோபமான பார்வையை வீசவே கிருஷ்ணர், “விதுரா! நான் அன்பிற்காகத் தான் ஏங்குகிறேன். எனக்கு உள்ளன்புடன் ஒரு துளி ஜலம், ஒரு இலை, ஒரு பழம் எதைத் தந்தாலும் அதுவே எனக்குப் போதும்” என்று அருளினார்.

உள்ளன்புடன் உணவு படைக்கப்பட வேண்டியது அவசியம்.

## ஜாதி தோஷம்

அடுத்தது ஜாதி தோஷம். உணவில் அடங்கி இருக்கும் மூலப் பொருள்கள் சாத்வீக குணமுடையதாக இருத்தல் அவசியம். பால், நெய், அரிசி, மாவு, பருப்பு போன்றவை சாத்வீக மானவை. புளிப்பு, உரைப்பு, உப்பு உள்ளவை ராஜஸிகமானவை. உள்ளிப்பூண்டு, வெங்காயம், மாமிசம், முட்டை போன்றவை தாமஸிகமானவை.

சாத்விக உணவு ஆன்மீக முன்னேற்றத்தைத் தருகிறது. ராஜஸிக உணவு உலோகாயத உணர் வைத் தூண்டி சுயநலத்திற்கு வழி வகுக்கிறது.

தாமஸிக உணவு தீய பிசாசு குணத்தை வளர்க்கிறது.

## சம்ஸ்கார தோஷம்

அடுத்தது சம்ஸ்கார தோஷம். தூய்மையாக உணவு சமைக்கப்பட்டாலும் கூட, உணவு வகைகள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டிருக்கக் கூடாது. அதிகமாக வேக வைத்தல், அதிகமாக வறுத்தல், பழைய உணவு போன்றவை தோஷமானவை. உடம்புக்கும் உள்ளத்திற்கும் ஊறு விளைவிப்பவை.

ஆக இந்த ஐந்து வித தோஷங்களையும் விலக்கி ஒருவன் உணவை உண்ண வேண்டும். தாயார் அல்லது மனைவி இல்லத்தில் சமைத்துப் பரிமாறும் உணவை ஏற்புடையது என்று அதனால் தான் முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.



# பராமரிப்பற்ற ஆலயங்களில் பூஜைகளுக்கு உதவி செய்யும் சென்னை சைவக்குழு

அடியார் பெருமக்களுக்கு, செல்வி ராமலிங்கம் ஆகிய எனது பனிவான வணக்கம்......

சென்னை சைவ குழு முதன் முதலில் கல்பாக்கம் அருகிலுள்ள நெரும்பூர் என்னும் கிராமத்தில் பிரதோஷ பூஜை ஆரம்பித்து, மாதம் இரண்டு பிரதோஷங்களும் சிறப்பாக செய்து அதிலிருந்து மற்ற ஆலயங்களுக்கும் அபிஷேக பொருட்களை வழங்கி, பின்பு ஆலயங்களின் எண்ணிக்கை மாதம் மாதம் கூடி தற்போது 3,500 ஆலயங்களுக்கு மேல் அபிஷேக பொருட்களை வழங்கி வருகிறோம்....





கோவில்களுக்கு வழங்கப்படும் பொருட்கள்

இதற்காக உலகம் முழுவதும் உள்ள நமது “சென்னை சைவ குழு”வின் அடியார்கள் தங்களால் இயன்ற கைங்கரியம் செய்து எனக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்....

தமிழ் நாட்டில் இன்னும் பல பகுதிகளில் சிவாலயங்களில் விளக்கேற்றாமலும் பூஜைகள் / அபிஷேகம் செய்ய வசதி இல்லாமலும் உள்ளது அந்த ஆலயங்களுக்கு அருகிலுள்ள அடியார்கள் தங்களால் இயன்றவற்றை செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.....

சென்னை சைவக்குழுவின் முக்கிய நோக்கம் என்னவென்றால் நமது முன்னோர்களால் எழுப்பட்ட சிவாலயங்களில் இன்று பல ஆலயங்கள் பராமரிப்பில்லாமலும் பூஜைகள் ஏதும் இல்லாமலும் விளக்கு கூட ஏற்ற வசதி இல்லாமலும் இருக்கின்றன ....

அப்படிப்பட்ட ஆலயங்களை தேடிப்பிடித்து அதில் ஒரு கால பூஜை நடக்கவும் விளக்கேற்றவும் நம்மாலான பொருட்களை வழங்கி வருகி றோம் ....

இதுமட்டுமல்லாமல் ஆங்காங்கே ஆதரவில் லாமல் வெட்டவெளியிலும் வயல்வெளி மற்றும் ஏரிகள் குளங்கள் அருகில் ஆலயம் ஏதும் இல்லாமல் இருக் கும் லிங்க திருமேனிகளுக்கு ஷெட் அமைக்க வழிகாட்டலும் ஆலயங்கள் கட்ட வழிகாட்டுதலும் நமது முக்கிய பணிகள் ஆகும். அடியார் பெருமக்களும் ஆன்மீக நண்பர்களும் மனது இருந்தும் வழி தெரி யாமல் இருப்பவர்களும் நமது சென்னை சைவ குழுவுடன் இணைந்து இந்த சிவ புண்ணியத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விபரங்களுக்கு எங்களைத் தொடர்புகொள்ள
போன்: 8428310845 8428310865



# அஷ்டதிக் பாலகர்கள்

பூமியில் மானிடர்கள் செய்யும் நல்ல காரியங்களையும், தீய காரியங்களையும் சூரியனும், சந்திரனும், அஷ்டதிக் பாலகர்களும் கண்காணித்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்கிறது வேதங்கள்.

குபேரன், எமன், இந்திரன், வருணன், ஈசானன், அக்னி, வாயு, நிருதி ஆகிய இவர்கள் எண்மரும் அஷ்டதிக் பாலகராவர்

இவர்கள் பிரபஞ்சத்தின் எட்டு திசைக்கும் காவலர்களாக இருக்கிறார்கள்.

கிழக்கு ........................ இந்திரன்
தென்கிழக்கு ............... அக்னி
தெற்கு ......................... எமன்
தென்மேற்கு................. நிருதி (இராட்ஸசன்)
மேற்கு ......................... வருணன்
வடமேற்கு .................... வாயு
வடக்கு ......................... குபேரன்
வடகிழக்கு................... ஈசானன் (சிவன்)

**இந்திரன்:**

இந்திரன் கிழக்கு திசையினை கண்காணிப் பவர். இவரே தேவர்கள் அனைவருக்கும் தலை வராக உள்ளார். இவரது மனைவி இந்திராணி.

தேவலோகத்தின் அரசன் இந்திரன் ஆவார். இவர் காலத்தால் அழிந்த விழாவான 'இந்திர விழா"வின் நாயகன். இவர் ஐராவதம் என் னும் வெள்ளை யானையை வாகனமாகக் கொண் டவர்.

இவரின் ஆயுதம் மின்னலைப் போன்ற வலிமையுள்ள வஜ்ராயுதம் ஆகும். இவரே அஷ்டதிக்கு பாலகர்களின் தலைவராகவும் இருக்கிறார்.

இவரை வழிபட எல்லா வளங்களையும், நோய், பகையை நீக்கி வளமை அளிக்கக்கூடியவர் இந்திரன்.

இந்திரனின் காயத்திரி மந்திரம்

ஐராவத கஜாரூடம்
ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம்
ஸகஸ்ர நயநம் ஸக்ரம்
வஜ்ரபாணிம் விபாவயேத்

அக்னி தேவன்:

தென்கிழக்கு திசையின் அதிபதியாகக் கருதப்படுபவர், அக்கினி தேவரை வணங்கி வர மனதில் குடிகொண்டு இருக்கும் இருள் நீங்கி தெளிவு பிறக்கும்.

நெருப்பிற்கான அதிகாரம் இவருடையது. வேள்வியின்போது இடப்படும், நைவேத்தியப் பொருட்களை அக்னி மற்ற தெய்வங்களுக்கு எடுத்துச் செல்வதாக கூறப்படுகிறது.

இவருடைய மனைவியின் பெயர் சுவாகா தேவி. அக்னி பகவானின் வாகனம் ஆட்டுக்கிடா. இவரது ஆயுதம் தீ ஜூவாலையுடன் கூடிய வேல் ஆகும்.

இவரை வழிபாடு செய்தால் தேக வனப்பு மற்றும் தேக பலம், மனஅமைதி, குடும்ப மேன்மை கிடைக்கும்.

அக்னியின் காயத்திரி மந்திரம்

ஸப்தார்சிஷம் ச பிப்ராணம்
அக்ஷமாலாம் கமண்டலும்
ஜ்வாலாமாலாகுலம் ரக்தம்
ஸக்திஹஸ்தம் சகாஸநம்

**யமன்:**

தெற்கு திசையின் காவலராக இருப்ப வர் எமதர்மன். இவர் தரும தேவன்,காலதேவன், எமதர்மராஜா என்ற பெயர்களில் அழைக்கப் படுகிறார். இவர் தர்மத்தின் வழி நடப்பவர்.

இறப்பின் கடவுளாக பார்க்கப்படும் இவர், ஒருவரின் வாழ்நாள் முடியும் காலத்தை கணக் கிட்டு, அந்த நேரத்தில் அவரது உயிரை பறிக்கும் பணியைச் செய்துவருகிறார்.

சூரிய பகவான் மகனான இவர், தேவர் களுள் மிகவும் மதி நுட்பம் மிகுந்தவராக கருதப்படுகிறார். இவரது மனைவியின் பெயர் குபேர ஜாயை. எமதர்மனின் வாகனம் எருமைக் கிடா. இவரது ஆயுதம் பாசக்கயிறு.

இவரை வழிபாடு செய்தால் நம்மை அண்டியிருக்கும் தீவினைகள் அனைத்தும் நீங்கி நல்வழி பிறக்கும்.

எமனின் காயத்திரி மந்திரம்

க்ருதாந்தம் மஹிஷாரூடம்
தண்டஹஸ்தம் பயாநகம்
காலபாஸதரம் க்ருஷ்ணம்
த்யாயேத் தக்ஷிணதிக்பதிம்

**நிருதி:**

தென்மேற்கு திசையின் அதிபதியான நிருதி

தேவனின், மனைவி பெயர் கட்கி. இவருடைய வாகனம் பிரேதம். கட்கம் என்னும் வாளை ஆயுதமாகக் கொண்டிருப்பவர்.

இவரை வழிபாடு செய்தால், எதிரிகளின் பயம் நீங்கும். வீரம் பிறக்கும். மனை சம்பந்தமான இன்னல்கள் நீங்கி சுபிட்சம் உண்டாகும்

நிருதியின் காயத்திரி மந்திரம்

ரக்தநேத்ரம் ஸவாரூடம்
நீலோத்பல தளப்ரபம்
க்ருபாணபாணி மாஸ்ரௌகம்
பிபந்தம் ராக்ஷஸேஸ்வரம்

**வருணன்:**

மேற்கு திசையின் அதிபதி வருணன் ஆவார். மழையைப் பொழிந்து பயிர்களை வளரச் செய்து மக்களுக்குக் களிப்பை உண்டு பண்ணி ஸௌகத்தைக் கொடுப்பவன்.

இவரை மழையின் கடவுள் என்று போற்று கிறார்கள். ஆறு, குளம், ஏரி, கடல் உள்ளிட்ட நீர்நிலைகள் இவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட தாகக் கருதப்படுகின்றன.

ஐந்து வகையான நிலங்களில் ஒன்றான நெய்தல் நிலத்திற்கு உரிய தெய்வமாகவும் வருண பகவான் வணங்கப்படுகிறார்.

இவரது மனைவியின் பெயர் வாருணி. வருண பகவானின் வாகனம், மகரம் என்னும் மீன் ஆகும். இவர் வருணாஸ்திரம் என்ற ஆயுதத்தை தாங்கியுள்ளார். இவரை வழிபாடு செய்தால், தேவையான மழை கிடைத்து உணவு, பஞ்சம் நீங்கும்.

வருணதேவரை வணங்கி வருவதால் சிறந்த அறிவாற்றலும், உடலில் வலுவும் உண்டாகும்.

வருணனின் காயத்திரி மந்திரம்

நாகபாஸதரம் ஹ்ருஷ்டம்
ரக்தௌகத்யுதி விக்ரஹம்
ஸஸாங்க தவளம் த்யாயேத்
வருணம் மகராஸநம்

**வாயு:**

வடமேற்கு திசையின் காவலர் தான் இந்த வாயு பகவான். சிரஞ்சீவியும், ராமரின் பக்தரு மான அனுமன் மற்றும் மகாபாரத காலத்தில் வாழ்ந்த பீமன் ஆகியோரின் தந்தை இந்த வாயு பகவான் என்று புராணங்கள் சொல்கின்றன.

இவரது மனைவியின் பெயர் வாயு ஜாயை. வாயு பகவானின் வாகனமாக மான் இருக் கிறது. அங்குசம் என்ற ஆயுதத்தை இவர் தாங்கியிருக்கிறார். வாயு வடிவமற்றவன். மக்களுடைய ப்ராணனுக்கு ஆதாரமாயுள்ளவன். இவனை உபாசிப்பதால் நீண்ட ஆயுளையும், பலத்தையும் பெறலாம்.

வாயு காயத்திரி மந்திரம்

ஆபீதம் ஹரிதச்சாயம்
விலோலத்வஜ தாரிணம்
ப்ராணபூதம்ச பூதாநாம்
ஹரிணஸ்தம் ஸமீரணம்

**குபேரன்:**

குபேரன் மக்களுக்கு ஸௌகத்தைக் கொடுத்து ஸம்பத்தையும் செல்வத்தையும் வளரச் செய்பவன்.

குபேரன் காயத்திரி மந்திரம்

குபேரம் மநுஜாஸீநம்
ஸகர்வம் கர்வவிக்ரஹம்
ஸ்வர்ணச்சாயம் கதாஹஸ்தம்
உத்தராதிபதிம் ஸ்மரேத்

**ஈசாநன்:**

வடகிழக்குத் திசையின் அதிபதியான ஈசானன், மங்கலத்தின் வடிவமாக பாவிக்கப் படுகிறார்.

சிவபெருமானின் ஐந்து முகங்களில் ஒன்று ஈசானம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈசானனின் மனைவி பெயர் ஈசான ஜாயை. இவர் எருதினை வாகனமாக வைத்திருப்பவர். திரிசூலம் இவரது ஆயுதம் ஆகும்.

இவரை வழிபாடு செய்வதன் மூலமாக ஞானத்தைப் பெற முடியும்.

ஈசாநன் காயத்திரி மந்திரம்

ஈஸாநம் வ்ருஷபாரூடம்
த்ரிஸூலம் வ்யாலதாரிணம்
சரச்சந்த்ர ஸமாகாரம்
த்ரிநேத்ரம் நீலகண்டகம்

நாம் செய்யும் செயலுக்கு ஏற்ற திசையும் அதன் பாதுகாவலராகவும், கண்காணிப்பாளராகவும் இருக்கும் இந்த பாலகர்களை வழிபட்டு நம் செயலை தொடங்கினால் எப்போதும் சுபிட்சம் உண்டாகும்.



எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# பள்ளியறை பூஜை முடிந்ததும் ஞானியருக்கு காட்சி தரும்

# திருச்செந்தூர் முருகன்

முன்பு ஒரு காலத்தில் திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரபட்டினத்தை சேர்ந்த ஒரு ஞானி கடற்கரை பாதையாக நடந்தே சென்று திருச்செந்தூர் முருகன் கோவிலில் இரவு பள்ளியறை தீபாராதனையில் கலந்து கொள்வார்.

ஒரு பௌர்ணமி நாளன்று வரும் பொழுது கடலில் 4 அரக்கர்கள் கட்டிலுடன் இளம் பெண்ணை கடத்தி வருவது நிழலாக தெரிந்தது.



அவர்களை உடனே இறங்க பணித்தார். யார் கண்ணுக்குமே தெரியாத தாங்கள் ஞானியார் கண்ணுக்கு அஞ்சி நடுங்கி இறங்கினார்கள். மலையாள தேசத்து மன்னன் மாந்தரீகர் உதவியுடன் இலங்கை மன்னர் மகளை கடத்தியது தெரிய வந்தது.

உடனே ஞானியார், இளவரசியினை எடுத்த இடத்திலேயே விடவும் மலையாள மன்னரையும் மாந்தரீகரையும் அழைத்து வர பணித்தார். அவர்கள் வந்ததும் தனது வீட்டில் ஒரு அறை கதவை திறந்து காண்பித்தார். மன்னர் மனைவி மக்கள் மாந்தரீகர் மனைவி மக்கள் சிறைபட்டிருந்தனர்.

சிறிது நேரத்தில், கதவை பூட்டி திறந்தார் உள்ளே யாரும் இல்லை. அவர்களுக்கு தன் பிள்ளைகளை ஒருவன் கடத்தினால் எந்த அளவிற்கு துன்பப்படுவோம் என உணர்த்தும் முகமாக செய்து கான்பித்து நல்வழி படுத்தினார். இத்தகைய சிறப்பு மிக்க ஞானம் பெற்றவரை ஞானியர் என்று அழைக்கப்பட்டுவந்தார்.

வருடங்கள் உருண்டோடின. தள்ளாத வயதிலும் பள்ளியறை தீபாராதனை வருவதை கைவிடவில்லை. அப்படி ஒரு நாள் வருகையில், கண் தெரியாமல் கடலினை நோக்கி சென்றார்.

அப்போது ஒரு சிறுவன் ஓடி வந்து... இப்படி போன ஒரேடியா போக வேண்டி தான், என்று சொல்லி கோவிலுக்கு அழைத்து சென்றான்.

இரவு வீடு திரும்பி தூங்கும் பொழுது ஞானியாருக்கு கனவுவந்தது.

கனவில் அச்சிறுவன் தோன்றினான்.

"இனி கோவிலுக்கு தள்ளாத வயதில் வர தேவையில்லை. தினசரி கொண்டு வந்து விட முடியாது" என்று கூற.

ஞானியார் "பெருமானின் தரிசனம் வேண்டுமே" என்று வேண்ட....

"பள்ளியறை முடிந்ததும் தானே வந்து தரிசனம் தருகிறேன்" என்று முருகப்பெருமான் உறுதியளித்தார், அதன்படி, அவரது கடைசி காலம் வரை தினசரி பள்ளியறை முடிந்ததும் வந்து முருகப்பெருமான் காட்சி தந்ததாக கூறப்படுகிறது.

இன்றும் குலசேகரபட்டினத்தில் ஞானியாருக்கு காட்சி தந்த இடம் திருச்செந்தில் ஆண்டவன் படுக்கை வீட்டு கோவிலாக போற்றப்படுகிறது.

இன்றும் திருச்செந்தூர் கோவிலில் பள்ளியறை தீபாராதனை முடிந்ததும் ஞானியார் மடத்தில் முருகருக்கு பூஜை நடைபெறும்...



ஞானியார் சமாதி



படுக்கை வீட்டு கோவில்

# மர்மம் நிறைந்த நாழிக்கிணறு

திருச்செந்தூர் நாழிக்கிணற்றைப் பற்றி பல்வேறு வகையான கருத்துக்கள் பலவாறு கூறப்பட்டுகிறது.

கடற்கரையின் நிலப்பரப்பிற்கு அடியிலுள்ள நீர் கடல் மண்ணினால் வடிகட்டப்பட்டு உவர்ப்பு நீங்கி இனிப்பு சுவையுடன் உருவெடுக்கிறது. அதனால்தான் நாழிக்கிணற்றில் சுவையான தண்ணீர் கிடைகிறது என்று சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவர்களது ‘அறிவியல்’ கருத்து சரியாக இருந்தால் திருச்செந்தூர் கடற்கரையை ஒட்டியுள்ள அனைத்து கிணறுகளிலும் நல்ல சுவையுடன் தண்ணீர் இருந்திருக்க வேண்டும்.

மாறாக கடல் தண்ணீரைவிட அதிகமான உப்பு தன்மையுடன் மற்ற கிணற்றுத் தண்ணீர் இருக்கிறது?

அது ஏன்? நாழிக்கிணற்றில் மட்டும் தண்ணீர் வடிகட்டபடுவதற்கு காரணம் என்ன?

புராண நிகழ்வின்படி முருகப்பெருமான் தனது படைவீரர்களின் தாகத்தினை தீர்ப்பதற்காக தன் வேலினால் இந்த கிணற்றை உருவாக்கியதாக கூறப்படுகிறது.

புராணக்கதையை கிண்டல் செய்யும் பலர், நாழிக்கிணறு இயற்கையாக அமைந்த ஊற்று என்றும் செயற்கையாக யாரும் உருவாக்கவில்லை என்றும் பொய்களை பரப்புகின்றனர்.

ஆனால் தரை மட்டத்திலிருந்து 35 அடிகள் தோண்டியபின் கிடைக்கும் ஊற்றை இயற்கை யாக அமைந்த ஊற்று என்று கூறுவதில்லை!

செயற்கையாக தோண்டப்பட்ட கிணற்றில் காணப்படும் ஊற்று என்றுதான் கூறுவார்கள்.

சுற்று வட்டாரத்தில் சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவுவரை எங்குமே நல்ல தண்ணீர் கிடைக்காத ஒரு கடற்கரை பாலைவனத்தில், 35 அடிகள் ஆழம் தோண்டி அதில் நல்ல தண்ணீரை கொடுக்கும் ஆற்றல் கடவுளுக்கு










மட்டுமே உண்டு.

இத்தனைக்கும், நாழிக்கிணறு கடற்கரையி லிருந்து நூறு அடி தொலைவில்தான் உள்ளது.

அதைவிட வியப்பு, நாழிக்கிணற்றின் நீர்மட்டம், கடல் மட்டத்தைவிட 15 அடிகள் தாழ்வான நிலையிலிருப்பதுதான்.

அதைவிட பெரிய வியப்பு, திருச்செந்தூர் கடற்கரை பகுதியில், நாழிக்கிணற்றை தாண்டி சுமார் பத்து கிலோமீட்டர் தொலைவுவரை நிலத்தடி நீரில் கடல்நீர் கலந்து மாசு அடைந்துவிட்ட நிலையில், நாழிக் கிணற்றில் மட் டும் தண்ணீர் மாசடை யாமலிருப்பது!

நாழிக்கினற்றை பொறுத்தவரை இதுபோன்ற ‘வியப்புகளை’ அடுக்கிகொண்டே போகலாம்.

இறை மர்மங்கள் பலவற்றை கொண்டு திகழும் நாழிக்கிணற்றுக்கு இதுவரை அறிவியல் ரீதியாக பதில் ஏதும் நம்மிடம் இல்லை.

– விஜயலட்சுமி.

# ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் நடைபெற்ற பிரதிஷ்டாபன வைபவம்

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் சிவநாகம், திரிசூலம் மற்றும் சப்தகன்னியர் பிரதிஷ்டை நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா பேட்டை, ஸ்ரீ தனவந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி ‘‘யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு’’ டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருளாசிகளுடன் 26.02.2020 புதன்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை சக்தி ஹோமம், சப்தகன்னியர் ஹோமத்துடன் சிவநாகம், திரிசூலம் மற்றும் சப்தகன்னியர் பிரதிஷ்டாபன வைபவம் நடைபெற்றது.

இதில் மங்கள் இசையுடன் கோ பூஜை, கணபதி பூஜை, புண்யாஹா வாசனம், யாகசாலை பூஜை, கலசாவாஹனம், பாராயணங்கள் நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற ஹோமங்களில் திரிமதுரம், மூலிகைகள், சமித்துகள், புஷ்பங்கள், பழங்கள், நிவேதன பொருட்கள், வஸ்திரங்கள் சமர்ப்பிக்கபட்டு மஹா பூர்ணாஹுதி நடைபெற்றது. இதனை தொடர்ந்து கலசப்புறப்பாடும் மஹா அபிஷேகமும், சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றது.

இதில் திமிரி, பரதராமி ஸ்ரீ மகாசக்தி மாரியம்மன் ஆலய ஸ்தாபகர் அவர்கள் மற்றும் சுற்றுபுர நகர கிராம மக்கள் பங்கேற்றனர். பங்கேற்றவர்களுக்கு யக்ஞஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருளாசிகளை வழங்கி இறை பிரசாதங்கள் வழங்கினார்.






# அசைவம் தவறில்லை தோஷத்தை தரும் கொடூரம் தான் தவறு

அசைவம் இந்த வார்த்தை தற்போது உலக அளவில் வேகமாக பரவிவருகிறது. உலகில் உள்ள பெரும்பாலான மதங்கள் அசைவத்தை அங்கீகரித்தாலும், இந்து மதத்தில் ஒருசில தெய்வவழிபாட்டுமுறைகளைத் தவிர மற்ற அனைத்து தெய்வ வழிபாட்டுமுறைகளிலும் அசைவத்தை அங்கீகரிப்பதில்லை.

கிராமத்து காவல்தெய்வங்கள், ஒருசில குலதெய்வ வழிபாட்டுமுறைகள், ஒருசில சமுதாயத்தைச் சேர்ந்த முன்னோர் வழிபாட்டு முறைகளில் அசைவத்தை அங்கீகரித்துள்ளது.

இந்த வழிபாட்டு முறைகளில்கூட அசைவத்திற்குரிய உயிரினத்தை சித்ரவதை செய்து கொல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மற்றபடி இந்து தெய்வ வழிபாட்டுமுறை முற்றிலும் சைவத்தை சார்ந்தே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அசைவத்தை மக்கள் உண்பதற்கும் எந்த கட்டுப்பாட்டையும் இந்து மதம் விதிக்கவில்லை, அசைவத்தை உண்டாலும், கோவில் செல்லும்போதும், விரதம் இருக்கும் சமயங்கள், இந்து மதபண்டிகை, போன்ற நாட்களில் அசைவத்தை தவிர்க்க மட்டுமே வலியுறுத்தியுள்ளது.

குளிர்காலங்களில் அசைவம் மூலம் பல்வேறு கிருமிகள் பரவ வாய்ப்பிருப்பதை உணர்ந்த முன்னோர், அக்காலக்கட்டத்தில் ஏதாவது ஒரு தெய்வத்தின் பெயரில் விரதங்களை அனுஷ்டிக்க வலியுறுத்தினர், எடுத்துக்காட்டாக கார்த்திகை மாதம் ஐயப்பனுக்கு, மார்கழியில் பெருமாளுக்கு விரதம், இந்த அசைவ தவிர்ப்பு கூட புதிய தொற்று நோய்களை தடுக்கும் நோக்கமே தவிர வேறு ஒன்றுமில்லை.

தற்போது சீனாவில் – டிகிரியில் பரவிய வைரஸ் பல ஆயிரக்கணக்கான உயிரினங்களை பலிவாங்கியது. இந்த கடும் குளிர்காலங்களில் சீனர்கள் கடைபிடித்த தவறான உணவு முறையால்தான் இந்த பேரழிவு நிகழ்ந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு அசைவத்திற்கு கூட சில வழிமுறைகளை கடைபிடிக்க வலியுறுத்தும் ஒரே மதம் இந்து மதம்.

இறைச்சிக்கு வெட்டப்படும் விலங்குகள் துடித்து இறக்கும்போது ஒருவித சாபம் அதை புசிப்பவருக்கு ஏற்படும். இதனால்தான், இறைச்சியாக்கப்படும் விலங்கை கூட கொடுமை படுத்தக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஆனால், இன்று அசைவம் சாப்பிடும் இந்து மக்களில் பல்வேறு தரப்பினருக்கு இந்த விஷயம் தெரியாமலேயே இருக்கின்றனர்.

அதுபோன்றவர்களுக்கு விளக்கமாக சொல்வதற்குதான் நமது "ஆன்மிகமலர் மெயில்புக்" இந்த கட்டுரையை சமர்பித்துள்ளது.

இன்று எந்த அசைவ உணவகத்துக்கு சென்றாலும், மற்ற மாமிசங்கள் விற்கும் இடங்களுக்கு சென்றாலும், ஒரு அறிவிப்பு பலகையை பார்த்து இருப்பீர்கள். "ஹலால் செய்யப்பட்டது" என்று!

"ஹலால்" ஹிந்து மதம் ஏற்றுக்கொள்ளாத ஒன்று என்பது நம்மில் பலருக்கு தெரியாது.

ஹிந்துக்களின் புலால் உண்ணும் முறைக்கு "ஜட்கா" என்று பெயர்.

"ஹலால்" இஸ்லாமியர்களுக்கானது.

விரிவாக இதைப்பற்றி பார்ப்போம்.

### "ஹலால்" என்றால் என்ன?

- ஒரு விலங்கை, அதன் முன்னங்கழுத்தின் ரத்த நாளங்களை சிறிதாக அறுத்து, அதன் ரத் தம் முழுக்க வடிந்து அதனை இறக்க விடுவது!
- இந்த முறையில் கொல்லப்படும் விலங்கு உடனே சாகாது.
- அது மரண அவஸ்தையை முழுமையாக அனுபவித்து, துடித்து துடித்து சாகும்.
- அதற்கு வலி தெரிய வேண்டும் என்பதற்காக தண்டுவடத்தை அறுபடாமல் பார்த் துக்கொள்வர்.
- அவ்வாறு அறுக்கப்படும் பொழுது ஒரு இஸ்லாமியர் குரான் ஓதுவார்.
- கிராமப் புறங்களில் முஸ்லிம்கள் இதனை "ஓதி அறுப்பது" என்பார்கள்.

ஹிந்து மதம் அஹிம்சை விரும்பும் மதம். சைவம்.

ஏற்கனவே கூறியபடி புலால் உணவை மறுக்கவில்லை.

ஆனால் ஹிந்து மதத்தில் வலி ஏற்படுத்துவது ஏற்றுக் கொள்ள படாத ஒன்று.

கோயில்களில் பலி கொடுக்கும் போது கூட ஒரே வெட்டில் விலங்கை கொன்று விட வேண்டும் என்பது தான் முறை.

அதாவது அந்த விலங்கிற்கு தான் வெட்டப் பட்ட வலி தெரிவதற்கு முன்பே மரணம் எட்டி விடும்.

ஓங்கி வெட்டும் போது முதலில் தண்டுவடம் வெட்டுப்படும்படி பின்னங்கழுத்தில் வெட்டுவதால் உடனடி, மற்றும் வலி இல்லா மரணம்.

இந்த முறைக்கு "ஜட்கா" என்று பெயர்.

சீக்கிய குருவான குரு கோவிந்த் சிங் சீக்கியர்களுக்கு ஹிந்து முறையான "ஜட்கா" மாமிசத்தை மட்டுமே உண்ண வலியுறுத்தி உள்ளபடியால் பஞ்சாப் மாநிலத்தில் எல்லா கடைகளிலும் "ஜட்கா" மாமிசம் என்ற பலகை இருக்கும்.

ஒரு முஸ்லீம், அது ஹலால் செய்யப்பட்டதா என்று தெரியாவிட்டால் அசைவம் சாப்பிட மாட்டார்.

ஆனால் ஹிந்துக்கள் ஹலால் செய்யப்பட்டது என்று தெரிந்தாலும் சாப்பிடும் நிலையில் உள்ளனர்.

> **"ஹலால்" ஹிந்து மதம் ஏற்றுக்கொள்ளாத ஒன்று. ஹிந்துக்களின் புலால் உண்ணும் முறைக்கு "ஜட்கா" என்று பெயர்.**

ஒரு முஸ்லீம், இந்து சாமிக்கு படைத்த ஒரு உணவைகூட, கோடி ரூபாய் கொடுத்தாலும் சாப்பிடமாட்டார்கள்.

ஆனால் ஹிந்துக்கள் குரான் ஓதி அறுத்த மாமிசத்தை சாப்பிட தயாராகவே உள்ளனர்.

இதனால் தானே பத்து சதவிகிதம் உள்ள முஸ்லிம் களுக்காக தொண்ணூறு சத விகிதம் ஹிந்துக்களுக்கும் ஹலால் உணவை கொடுக்கிறார்கள்.

கொடுரமாக மரணஅவஸ்த்தை அடைந்து இறந்த அந்த இறைச்சி நிச்சயம் ஒருவித சாபத்திற்குட்பட்டதாகவே இருக்கும்.

இவ்வகை இறைச்சி சாப்பிட்டால் நிச்சயம் ஏதேனும் உணவு சம்பந்தப்பட்ட தோஷம் ஏற்பட வாய்ப்புள்ளது. இனியாவது

"ஜட்கா" மாமிசம் இல்லை என்று தெரிந்தால் ஒரு ஹிந்து வாங்காமல் தவிர்ப்பது நலம்.

முடிந்த அளவு இறைச்சியை தவிருங்கள், முடியாவிட்டால் சித்திரவதை செய்யப்பட்டு இறைச்சியாக்கப்படும் "ஹலால்" உணவு முறையையாவது தவிருங்கள். இதற்கு ஒரேவழி இந்துக்களால் நடத்தப்படும் இறைச்சிக்கூடத்தை நாடுங்கள்.



# புனிதத்தீர்த்தமான சஞ்சீவி மருந்து

நம் வீட்டிலேயே செய்து உண்டு பயன்பெறக் கூடிய ஒரு புனித தீர்த்தம் முறையை இப்போது பார்ப்போம். இப்புனித தீர்த்தம் காய கற்ப சஞ்சீவியைப் போல பற்பல நோய்களை நீக்கி நல்வாழ்வு அளிக்கும் குணம் கொண்டது.

புனித தீர்த்தம்.

1 ஏலம்,

2 இலவங்கம்,

3 வால்மிளகு,

4 ஜாதிப்பத்திரி,

5 பச்சைக் கற்பூரம்

இவைகளில் முதல் நான்கும் வகைக்கு ஒரு பங்கும், பச்சைக் கற்பூரம் கால் பங்கு சேர்க்கவும். முதல் நான்கு பொருள்களையும் உலர்த்தி இடித்து பொடித்துக் கொள்ளவும். பிறகு பச்சைக் கற்பூரத் தையும் பொடித்து இதனுடன் கலந்து கொள்ளவும். இதனை பாட்டிலில் பதனம் செய்து பூஜை அறையில் வைக்கவும்.



இந்த தீர்த்தப் பொடியை திரிகடி [மூன்று விரல் அளவு] அளவு எடுத்து ஒரு தாமிர தம்ளரில் தண்ணீரில் கலந்து முதல் நாள்இரவு வைத்து மறு நாள் காலை வெறும் வயிற்றில் பூஜை முடித்தவுடன் அருந்த சகல நோய்களும் எளிதில் நீங்கிஉடல் பலம் பெறும்.இதனுடன் சைவ வழிபாட்டில் உள்ளவர் கள் வில்வம் சேர்த்து அருந்தலாம்.

வைணவ வழி பாட்டில் உள்ளவர்கள் துளசி சேர்த்து அருந்தலாம். இருதயம், இரைப்பை பலம் பெறும்,கண்கள் பற்றிய நோய் யாவும் நீங்கும், நரம்புத்தளர்ச்சி, சளி, சுவாசகாசம் நீங்கும், இரத்தம் சுத்தியாகும், பித்த ரோகங்கள், வாந்தி, தலைசுற்றல், மயக்கம், வாய்க்கசப்பு, மூச்சடைப்பு, வயிற்று வலி, கழிச்சல், மார்புவலி, மாரடைப்பு, போன்றவைகள் நீங்கும். இரத்தம் பெருகும்.

இது உடலைப் பற்றிய நோய்களை நீக்கும் வல்லமை கொண்ட சஞ்சீவி மருந்து முறையாகும்.

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# எனக்கு உதவி செய்யாதீங்க இது தெய்வம் கொடுக்கற தண்டனை

நாம எப்பவுமே எல்லாருக்கும் உதவி செய்யனும்னு நினைக்க மாட்டோம். அதுவும் ரொம்ப டீசன்ட்டா டிரஸ் போட்டுக்கிட்டு எங்கயாவது வெளியில போனா, அழுக்கு படிஞ்ச கந்தல் டிரஸ் போட்டு "அம்மா தாயி..." "ஐயா..."ன்னு கொஞ்சம் தள்ளி குரல் கேட்டாலே நைசா அந்த இடத்திலிருந்து நகரத்தான் பெரும்பாலும் பார்ப்போம்.

அனுபவத்தால் பக்குவப்பட்ட மனிதர்கள் என்று ஒருசிலர் இந்து மதத்தில் இருப்பார்கள், அவர்கள் முற்றும் துறந்த நிலையில் இருப்பார்கள். இந்து மதத்தில் இறை நிலையை அடைய பல்வேறு வழிகளில் இந்த நிலை கூட ஒரு வழிமுறைதான்.

தன்மானம், வெட்கம், சூடு சொரணை, போன்ற எண்ணற்ற உணர்வுகளை விட்டு சக மனிதன் ஒருவனிடம், "அம்மா தாயி..." "ஐயா..."ன்னு கையேந்துறதுக்கு கூட ஒரு சில கர்வங்களை விடுபவர்களால்தான் சாத்தியமாகும்.

(ஒருசிலர் இந்த நிலையை வைத்துக் கொண்டே காசுபணம் பார்க்க துணிந்து பிச்சை எடுக்கவும் ஆரம்பித்துவிடுகின்றனர். அவர்களைப்பற்றி நாம் பார்க்கத் தேவையில்லை)

சரி அந்த எண்ணம் எப்படி இருக்கும்னு நிறைய பேருக்கு தெரியாது? அதை எளிதாக தெரிந்து கொள்ளலாம்.

குடும்பத்திலேயே ஒரு சிலர் கூட பேசாமல் இருப்போம், அதன் காரணம் ஆராய்ந்து பார்த்தால் கர்வம், திமிர் என்பதாகத்தான் இருக்கும். இப்படிப் பட்டவர்கள் தானாக முன்வந்து, அவர்களிடம் தாழ்ந்து பேசிப்பாருங்கள். அப்போது உங்கள் மனோநிலை ஒருவிதத்தில் தடுமாறும். இந்த தடுமாற்ற நிலையை ஆராய்ந்து பார்த்தால் பக்குவநிலைக்கு எளிதாக வந்துவிடலாம்.

பணத்துக்காக பிச்சை எடுக்கும் கூட்டத்தை தவிர்த்து, ஞான நிலை என்ற ஒன்றை ஆராய்ந்து, இப்படிப்பட்ட பக்குவநிலையில் அலைபவர்கள் பெரும்பாலானோர் இன்றும் தெருவில் சுற்றித்திரிந்து கொண்டுதான் இருப் பார்கள்.

இவர்களில் ஒருசிலர் பசிக்கு மட்டுமே மற்றவரிடம் கையேந்துவார்கள், இன்னும் ஒருசிலர் கையேந்தக்கூட மாட்டார்கள். அப்படிப் பட்டவர்களிடம் பேச்சு கொடுத்து பார்த்தால் நிச்சயம் அவர்களின் அனுபவம் நமக்கு ஒரு பாடமாக இருக்கும்.

அப்படிப்பட்ட மனிதரை சமீபத்தில் சந்தித்ததை பற்றி கூறுகிறேன்.

ஆன்மிக சுற்றுலாவாக சமீபத்தில் வெளி மாநிலம் சென்றிருந்தேன், இரயில் நிலையத்திற்கு எதிரில் ஒரு நபர் கிழிந்த உடையுடன், எதையோ சிந்தித்தவாறு இருந்தார், அவரைப் பார்த்தவுடன் எதையாவது சாப்பிடக் கொடுக்கனும்ன்னு தோனுச்சு.

உடனே சப்பாத்தி அடங்கிய ஒரு பார்சலை கொடுக்க முற்பட்டேன் வாங்க மறுத்துவிட்டார், சரி 20 ரூபாய் நோட்டை நீட்டினேன் வேண்டாம் என்றார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது,

"என்னங்க வேனும்"னு கேட்டேன்

"நீ இங்க இருந்து போ"ன்னு தமிழில் பேசினார்.

அவருக்கு தமிழ் புரிகிறது என்பதால், அவரிடம் பேச முற்பட்டேன்,

"ஏங்க எதுவும் வேணாம்ன்றீங்க"

அவர் ஏதும் பேசவில்லை...

சிறிதுநேரம் அங்கேயே நின்றேன். அவராக பேசினார்.

"எனக்கு உதவி செய்யாதீங்க, இது தெய்வம் கொடுக்கற தண்டனை"ன்னு சொன்னார்.

எனக்கு புரியலை

"என்னங்கய்யா..."

"நல்ல நிலையில நா இருந்தப்ப என்னோட பெத்தவங்களைநான் சரியா கவனிக்கலை, அவங்க கடைசிகாலத்துல பசி பட்டினியை அனுபவிச்சி இறந்திருக்காங்க, ஆனா இளரத்தமா இருந்தபோது, அந்த வலி எனக்கு தெரியலை... ஆனா குடும்பம்னு அமைஞ்சி, அது இல்லாம போய் முடியாத நிலையிலதான் என்னோட பெத்தவங்க அனுபவிச்சத இப்ப நா இப்ப அனுபவிக்கிறேன்.

இந்த நிலையை கடவுள் எனக்கு கொடுத்த தண்டனையா நினைக்கிறேன், அதனால பெரும்பாலான உதவிகளை ஏற்பதில்லை."

பார்க்க பைத்தியக்காரத்தனமாக இருந்த நபரின் வார்த்தை தெளிவாக இருந்தது.

உண்மையில் கடமையை மறந்தவர் தற்போது உணர்ந்து தனக்குதானே தண்டனை கொடுத்துக் கொள்வது கூட ஒருவகை தெளிவதான்.

- ஷ்யாம்சுந்தர், சென்னை



# மனங்கள் பற்றற்றுவிடும்பொழுது உலகம் முடிவுறுகிறது

77 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் அருளுகிறார்: "இவ்வுலகத்தின் முடிவை நாம் அனுபவிக்கின்ற மற்றொரு வழி உறக்கத்தில், கனவுகளில், தன் மனதை இழத்தலில், மரணத்தில் உணரப்படுகின்ற பற்றற்ற நிலையில் உள்ளது. இந்த நிலைமைகள் நம் மீது திணிக்கப்படுகின்றன. ஆகவே உலகமுடிவின் அனுபவம் நமக்கு அவசியமானது எனத் தோன்றுகிறது. அதன் நோக்கம் உலகத்தின் மாயை இயல்பையும், நமது ஆன்மாவின் உண்மை இயல்பையும் நமக்கு போதிப்பதுதான். ஆன்மா உலகிற்கு வந்து மாயை வலையில் சிக்கிக் கொள்கிறது. அப்பொழுது நமக்கு நேருகின்ற துன்பங்களின் வாயிலாக இந்த உலகம் பரிபூர்ணமானது அல்ல என்பதை நாம் காணவேண்டும் என இறைவன் விரும்புகிறான். இவ்வாறான வழியில் அதனுடன் நாம் கொண்டுள்ள பற்றை அறுக்க நமக்கு உதவுகிறான். அதனுடனான நமது அடையாளமின்மையின் மூலமாக இங்கே நமது இருப்பு எவ்வளவு ஏமாற்றமளிக்கக்கூடியது என்பதை நமக்கு உணரச் செய்வதற்காக இறைவன் முயன்று கொண்டிருக்கிறான். எவ்வளவு அதிகமாக நான் உலகத்தையும் அதனுடைய குறைபாடுகளையும் கண்டேனோ, அவ்வளவு அதிகமாகியது இறைவனை அறிவதற்கான எனது தீர்மானம்."

நாம் ஆசைகளிலிருந்து விடுதலை பெறும்பொழுது உலகம் நமக்கு முடிவுறுகிறது.

குருதேவர் மேலும் அருளுகிறார்: " ஒரு பரவியல் தத்துவக்கருத்தின்படி எல்லா உலக ஆசைகளின் முடிவுதான் உலகத்தின் முடிவாகும். உங்களுடைய சொந்த மகிழ்ச்சிக்காக, உலக ஆசைகளிலிருந்து விடுபட்டு வாழ நீங்கள் தீவிர முயற்சி செய்ய வேண்டும். ஏதோ ஒன்று இல்லாமல் உங்களால் வாழ முடியாது என்றிருந்தால் நீங்கள் இன்னும் கற்றுக்கொள்ளவேண்டிய கடுமையான பாடம் ஒன்று உள்ளது. உங்களுடைய எல்லா நிறைவேற்றப்படாத ஆசைகளுடனும் நீங்கள் இவ்வுலகிலிருந்து நீக்கப்பட்டதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். அவை உங்களுடைய ஆன்மாவை, விடாது தொல்லை செய்பவை. நீங்கள் இதய வலிகளையும் ஏமாற்றங்களையும் மீண்டும் மீண்டும் தாங்கிக் கொண்டு, அந்த ஆசைகளிலிருந்து உங்களை குணப்படுத்திக் கொள்வதற்காக இங்கே பல தடவைகள் வரவேண்டியிருக்கும்."

மேலும் அவர் அருளுகிறார்: "இறைவனிடம் இவ்வாறு கூறுவது மிகவும் நல்லது. " இறைவா, என்னைப் படைக்க வேண்டுமென நான் உன்னிடம் கேட்கவில்லை. நீ இங்கே என்னை வைத்திருப்பதால் நான் ,இங்கிருக்கிறேன். என்னால் முடிந்த வரை நான் மிகச் சிறப்பாகச் செய்வேன். ஆனால் உனது சித்தத்தை நிறைவேற்றுவதைத் தவிர எனக்கு எந்த ஆசைகளும் இல்லை. நான் இனிமேலும் துன்புறுவதற்காக இங்கே திரும்ப அனுப்பப்படுவதை விரும்பவில்லை. சில சமயங்களில் ஒரு செல்வந்தனாகவும் சில சமயங்களில் ஓர் ஏழையாகவும், சில சமயங்களில் ஆரோக்கியக் குறைவுடனும் நோயுடனும் சில சமயங்களில் துன்பங்களுடனும், சில சமயங்களில் இடையிடையே சிறுசிறு மகிழ்ச்சிகளுடனும் முடிவுற்று திரும்ப வந்துகொண்டிருப்பதை தொடர நான் விரும்பவில்லை. நான் அழியும் மனிதன் அல்ல. நான் அழிவற்ற ஆன்மா."

"ஆசைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதனால் நீங்கள் ஒரு கல்போன்று உணர்ச்சியற்றவராகிவிடுவீர்கள் எனக் கவலைப்படவேண்டாம். ஆசையின்மை உணர்வுநிலையின் மிகவும் அற்புதமான ஒரு நிலையாகும். நான் அனைத்தையும் ரசித்து மகிழ்கிறேன். ஆனால் எதற்கும் எனக்கு ஆசையில்லை. எனவே நிறைவேற்றப்படாத நிலையிலிருந்து ஒருபோதும் எந்த வேதனையோ அல்லது ஏமாற்றமோ இல்லை. நான் எதைச் செய்தாலும், நான் எங்கு சென்றாலும் எனக்குள் நானே மகிழ்கிறேன், " எனக் கூறுகிறார் குருதேவர்.

"ஆகவே இறைவன் உங்களுக்கு எந்தப் பங்கினை அளித்துள்ளானோ, அதை உங்களால் முடிந்தவரை மிகச்சிறப்பாக மேற்கொண்டு ஆசைகளை உருவாக்கிக் கொள்ளாமல் செய்வதுதான் உண்மையான மகிழ்ச்சிக்கான வழி. வெளிப்புற நிலைமைகள் எதுவாயினும் சரி, நீங்கள் அகத்தே ஓர் அரசனாக இருக்க முடியும். நீங்கள் ஒரு கோடீஸ்வரனைவிட அதிக மகிழ்ச்சியாக இருக்க முடியும். கோடீஸ்வரன்களின் பிரச்சனைகளை நீங்கள் அறிந்திருந்தால் நீங்கள் அத்தகைய ஒருவராக இருக்க விரும்பமாட்டீர்கள். பற்றின்றி வாழுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் இதயத்தினுள் நடமாடும் ஆனந்த சொர்க்கத்தை எடுத்துச் செல்லுங்கள்.



www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

நீங்கள் இவ்வுலகில் இருப்பது மகிழ்விக்கப்படுவதற்காகத்தான். நீங்கள் ஒருதிரைப்படத்திற்குச் சென்றால், ஒரு துன்பக் கதையையோ, அல்லது ஓர் இன்பக்கதையையோ, அல்லது ஒரு நாடகத்தையோ பார்த்தால் அதன் பின்னர் கூறுகிறீர்கள். “ஓ, அது ஒரு நல்ல திரைப்படம்!” அது போலத்தான் நீங்கள் வாழ்க்கையையும் பார்க்கவேண்டும். அச்சம் கொள்ளாதீர்கள். அச்சத்தில் வாழ்ந்தால் ஆரோக்கியம் கெட்டுவிடும். நோய்க்கும் இன்னல்களுக்கும் அப்பாற்பட்டவராக இருங்கள். நீங்கள் உங்களுடைய நிலைமையை சீர்படுத்த முயலும்போது அகத்தே பற்றற்றிருங்கள். இறைவனிடத்தில் முழு நம்பிக்கையுடன் அகத்தே வலிமையாக இருங்கள். பின்னர் நீங்கள் உலகத்தின் எல்லா வரையறைகளையும் வெற்றிகொள்வீர்கள். நீங்கள் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் அரசனாக இருப்பீர்கள். நீங்கள் அவ்வாறாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் “ என்கிறார் குருதேவர்.

குருதேவர் மேலும் கூறுகிறார்: “இறைவன் உங்களுக்கு ஒவ்வோர் இரவும் உறக்கத்தில் அந்த விடுதலையை அளிக்கிறான். நீங்கள் உறங்கச் செல்லும்போது, அவனிடம் கூறுங்கள், “இறைவா, உலகம் எனக்கு முடிவடைந்துவிட்டது. நான் உந்தன் கரங்களில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறேன். நீ உனது வாழ்க்கைத் திரைப்படங்களாகிய சோகமும் சிரிப்பும் நலமும் நலிவும், வாழ்வும் சாவும், வளமும் வறுமையும் போரும் அமைதியும் ஆகியவற்றைக் காண்பதற்காக என்னை இங்கே வைத்திருக்கிறாய். இவை என்னை மகிழ்விப்பதற்கான கனவுகளே தவிர வேறல்ல. பற்றற்று ஒரே மெய்ம்மையாகிய உன்னைப் பற்றிய சிந்தனையில் இளைப்பாறுகிறேன்.”

இந்தக்கட்டுரையில் குறிப்பிடத்தக்க பொருள் என்னவென்றால், மனிதன் உள்பட எல்லா உயிர்களையும் இறைவன் படைக்கிறான். இறைவன் மனிதனைப் படைத்துள்ள நோக்கமே இறைவனைச் சென்றடைவதற்கேயாகும். அதற்கு மனித மனம் வளர்ச்சியடையவேண்டும்.

ஆனால் மிகவும் மிக குறைவானவர்கள்தான் அவ்வாறான நோக்கமுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் இறைவனின் அந்த நோக்கத்தை அறியவேண்டும்; பின்னர் அதற்கேற்றவாறு ஒவ்வொருவரும் வாழவேண்டும் என்றுதான் இறைவன் நினைக்கிறான். இறைவனை அடைவதற்காக உள்ள எல்லா வழிகளையும் அருளியிருக்கிறான். "பிறவி எடுப்பது எதற்காக?" என்பதையும் இறைவன் மனிதனை ஏன் படைக்கிறான் என்பதையும் ஒவ்வொருவரும் ஆராய வேண்டும். நமது குருதேவரின் போதனைகளில் அடங்கியிருக்கும் தத்துவங்களை மனதில் நிறுத்திப்பார்த்தால் தெரியவரும். இறைவன் விளையாட்டாக மனிதனைப் படைக்கவில்லை. ஆனால் இவ்வுலக வாழ்வில் நிகழும் பிறப்பும் இறப்பும் துன்பமும் மகிழ்ச்சியும் நோயும் எல்லாம் இறைவனுக்கு விளையாட்டேயாகும். உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் இறைவனின் குழந்தைகளே ! அதையும் ஒவ்வொருவரும் அறிய வேண்டும். சில ஆத்மாக்களுக்கு, பிறப்பும் இறப்பும் பல முடிந்துவிட்டாலும் அந்த ஆத்மாக்கள் வளர்ச்சி அடையாமலிருக்கின்றன. வளர்ச்சி அடைந்தால்தான் பிறப்பும் இறப்பும் குறையும். இறைவன், அனைவருக்கும் அறிவைத் தந்துள்ளான். அந்த அறிவைப் பயன்படுத்தி இன்றைக்கு இந்த உலகத்தில் நடப்பவற்றைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். தற்போதைய உலகம் இவ்வளவு அமைதியின்மையை வெளிப்படுத்துகிறதே; அது ஏன்? ஆழ்ந்து சிந்திக்கும்போது, இவற்றிக்கெல்லாம்

“ நல்ல வழியை தேர்ந்தெடுத்து அவ்வழியே செல்லுகையில் திடீரென்று ஓர் ஆசை நம் வழியை குறுக்கிட்டால், எதிரில் வரும் நபருக்கு நாம் வழியை விடுவதைப்போன்று இந்த ஆசைக்கும் அது போவதற்கான வழியைக்காட்டி நாம் ஆசையை கைவிட்டு ஓரமாக ஒதுங்கிப் போகவேண்டும். நாம் ஒதுங்கும்போது எந்த ஆசையும் நம்மைத் தொடாது ”

முக்கியகாரணம் ஆசைதான் என்பது தெரியவரும். இந்த ஆசையை ஒரு மனிதனானவன் துறந்துவிட்டால், அவன் இவ்வுலகில் வாழ்ந்தாலும், அவன் இவ்வுலகில் இல்லாமலிருப்பதைக் காணலாம். ஆசைகளும் பற்றும்தான் ஒருவனுடைய மேலும் மேலும் உள்ள பிறப்புகளுக்குக் காரணமாகின்றன. உலக ஆசைகளைத் துறப்பது என்றால் அது அவ்வளவு சுலபமல்ல. அதற்கு ஒரே வழிமட்டும்தான் உள்ளது. “இறைவனை ஆழ்ந்து நேசித்தல்.” இறைவனை மட்டும் நேசிக்கும்போது உலகத்திலுள்ள மற்ற பொருட்களுக்கு மதிப்பு இல்லாமலாகிவிடும். அதைக் கடந்து உலகபொருளாசைகளுக்கு வர வழியேதுமில்லை. உதாரணமாக நாம் ஒரு சிறிய பாதையில் நடந்து செல்லும்பொழுது எதிரில் வருபவனுக்கு நாம் வழிவிட்டால் தானே அவன் நம்மைக் கடந்து செல்வான். அதுபோன்றுதான் நம் மனமாகின்ற தேரோட்டி குண்டும் குழியும் ஆன தீயவழிகளில் நம்மை அழைத்துச் சென்றால் சரீரமாகின்ற தேர் பள்ளத்தில் விழுந்துவிடும். ஆன்மா காட்டும் (ஆசைகள் ஏதுமில்லாத) வழியில் சென்றால் இறைவனின் சாம்ராஜ்யத்தை அடையலாம். நல்ல வழியை தேர்ந்தெடுத்து அவ்வழியே செல்லுகையில் திடீரென்று ஓர் ஆசை நம் வழியை குறுக்கிட்டால், எதிரில் வரும் நபருக்கு நாம் வழியை விடுவதைப்போன்று இந்த ஆசைக்கும் அது போவதற்கான வழியைக்காட்டி நாம் ஆசையை கைவிட்டு ஓரமாக ஒதுங்கிப் போகவேண்டும். நாம் ஒதுங்கும்போது எந்த ஆசையும் நம்மைத் தொடாது. நாம் மனப்பூர்வமாக ஒதுங்கிப்போகவேண்டும். முதலில் ஓர் ஆசையை ஒதுக்கிவிட்டால் மீண்டும் ஓர் ஆசை எழும்; மேலும் மேலும் ஆசைகள் எழும். எந்த ஆசையாக இருந்தாலும் இறைவனை மட்டும் திடமாக மனதில் நிறுத்தி “இறைவா, உன்னை மட்டும்தான் நான் ஆசைப்படுகிறேன்; நீ மட்டும்தான் எனக்கு வேண்டும்; இந்த ஆசைகள் ஏதும் என்னைத் தொடாமல் ‘ நீதான் என்னை பாதுகாக்கவேண்டும்” என்று ஒவ்வொரு ஆசைகள் பிறக்கும்போதும் அவற்றை ஒவ்வொன்றாக இறைவனிடத்திலே ஒப்படைத்துவிட்டு பொறுப்பை இறைவன் மீது வைக்கவேண்டும். ஏனென்றால், இது இறைவனின் சோதனை. அவன் நமக்கு பரீட்சை வைக்கிறான். அவன் சோதித்தாலும் நாம் அதைத்தொடாமல் வைராக்கியமாக இருந்தால் காலப்போக்கில் ஆசைகளை நாம் அழைத்தாலும் வராது. ஏனெனில், இறைவனின் சோதனைகள் நம் மனதைப் பாலைவனமாக்கி விடுகிறது. இவ்வாறு வாழ்வில் வரும் மற்ற எல்லா தீமைகளையும் வெல்லலாம் இறைவன் நம் தந்தை அவன் நம்மைச் சோதிப்பது நம் நன்மைகாகவே ! இவ்வாறு சிறிது சிறிதாக மனதின் அழுக்குகளை இறைவனின் துணையோடு துடைத்து, மனதை இறைவனின் ஒளியால் நிரப்பினால் பிறப்பும் இறப்பும் இல்லாமலாகி, ஆன்மா இறைவனின் சாம்ராஜ்யத்தில் வாழ முடியும். நமது மனங்களுக்கு பற்றும் ஆசையும் அற்று விட்டால் பிறப்பு இறப்பிலிருந்து நாம் விடுதலை அடையலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்



# குண்டலினி சக்தி



மனிதனது உடம்பில், விசுத்தி சக்கரம் ஐந்தாவது நிலையில் இருக்கிறது. கீழிருந்து மேல்நோக்கி போகும் போது, இது ஐந்தாவது நிலையில் இருந்தாலும், குண்டலினி பாதையில் குண்டலினி சக்தியை தொடுவதற்கு மிக அருகினில் இருப்பதனால், இதை குண்டலினி நிலைக்கு முந்தையது, இரண்டாவது தகுதியில் இருப்பது என்று சொன்னாலும், அதுவும் சரியாகத்தான் இருக்கும். காரணம் விசுக்தியை தொட்டபிறகு குண்டலினி சக்தி தான் அடையவேண்டிய இறுதி லட்சியம்.

இந்த சக்கரம் பதினாறு இதழ் கொண்ட அழகிய தாமரை பூ வடிவத்தில் இருக்கிறது. தாமரை வடிவத்தில் இருந்தாலும் இதன் நிறம் செம்மை அல்ல பசுமையாகும். அடர்ந்த நீலம் கரைந்து கரைந்து தனது வடிவத்தை முற்றிலுமாக இழக்கும் போது, பசுமை வடிவத்தில் வருமென்று வண்ண கலவைகளின் தத்துவம் அறிந்தவர்கள் கூறுவார்கள். அடர்ந்த கருமை வண்ண வானம், சூரிய வெளிச்சத்தால் வெளிர் நீலமாகி மனித கண் கொண்டு உற்று பார்க்கும் போது, வெளிர் பச்சை நிறத்தில் தான் தெரியும். அதனால் தான் விசுக்தி சக்கரத்தை ஆகாய ஸ்தானம் என்று யோகிகள் கருதுகிறார்கள்.

இந்த ஆகாய ஸ்தானத்தில் அருள் செய்யும் சக்தியாகிய, அன்னை டாகினி என்பவள் நிறைந்திருக்கிறாள். டாகினி தேவி ஒருமுகம் கொண்டவள். ஆகாயம் பலமுகம் கொண்டது அல்ல. பிரபஞ்ச வெளியில் எங்கிருந்து பார்த்தாலும் ஒரே தன்மை உடையது என்பதை மனதில் வைக்க வேண்டும். இந்த ஆகாய தேவி, பாதிரி பூவின் நிறம் போல வெண்மை கலந்த சிவப்பு வண்ணம் உடையவள். கைகளில் கட்வாங்கம், கத்தி, சூலம் மற்றும் கேடயம் ஆகிய ஆயுதங்களை தாங்கியவளாக இருக்கிறாள்.

விசுக்தி சக்கரம் பதினாலு இதழ் கொண்ட என்று முதல் பத்தியில் பார்த்தோம். பதினாறு இதழ்கள் என்பது வடமொழியில் உள்ள பதினாறு உயிர் எழுத்துக்களின் வடிவமாகவும் இருக்கிறது ஒவ்வொரு இதழிலும் அம்ருதா, ஆகர்ஷின், இந்த்ராணி, உமா, ஊர்த்வகேசி, ருத்திகா, ஈசானி, ரூகாரா, லுகாரா, லூகாரா, ஏகபாதா, ஐஷ்வர்யாத்மீகா, ஓங்காரா, ஔஷதி, அம்பிகா, அக்ஷரா என்ற பதினாறு தேவிகள் உயிர் எழுத்தின் துவக்க எழுத்தாக கொண்டு அமர்ந்திருந்து ஆட்சி செய்கிறார்கள்.

இந்த சக்கரத்தில் குண்டலினி சக்தியானது பயணப்பட்டு வருகின்ற போது மனிதனுக்கே உரிய நான், எனது என்ற அகங்காரம் அழிந்து போகிறது. நாலு திசையிலும் கட்டுக்கடங்காமல் ஓடிக் கொண்டே இருக்கும் மனம், சந்திர மண்டலத்தில் உள்ள அமிர்தமான நீர் தடாகத்திற்குள் விழுந்து முற்றிலுமாக கரைந்து, மறைந்து உருவங்கள் அற்ற அருவமான பிரம்மத்தை நோக்கிய தியானத்தில் லயித்து விடுகிறது. இப்படி லயிக்கும் போது, குண்டலினி சக்திக்கு அதீத சக்தி உருவாகி ஒரே பாய்ச்சலில் ஆஞ்ஞை சக்கரத்தில் போய் உட்கார்ந்து விடுகிறது.

ஆஞ்ஞை என்பது ஆறாவது சக்கரம். இதுவே இறுதி சக்கரம். நமது இரண்டு புருவங்களுக்கு நடுவே இரண்டு இதழ் கொண்ட தாமரை பூ போல இது இருக்கிறது. இது அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதின் ஸ்தானமாகும். இங்கு குண்டலினி சக்தி வருகின்ற போது, நிலம், காற்று, நீர், தீ மற்றும் ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் உருவான மனது நசிந்து விடுகிறது. எனவே தான் ஆஞ்ஞை சக்கரத்தின் அதிபதியான ஹாகினி தேவிக்கு பஞ்சபூதங்களின் ஐந்து வடிவமும், மனதின் ஒருவடிவமும் சேர்ந்து ஆறு முகங்கள் அமைந்திருக்கிறது.

இந்த தேவி நான்கு கை உடையவளாக இருக்கிறாள். உடுக்கை, அக்ஷமாலை ஞான முத்திரை, கபாலம் ஆகியவைகள் அவள் கைகளிலே இருக்கிறது. இந்த தேவி மனித உடம்பில் உள்ள எலும்புகளில் இருக்கும் மஜ்ஜையில் தனது சக்தியை நிலை நிறுத்துகிறாள். இவளே விசுக்தி முதலாகிய ஐந்து சக்கரங்களின் தலைவி ஆவாள். ஐந்து சக்கரங்களின் செயல்பாட்டையும் ஹாகினி தேவியே முன்னின்று நடத்துகிறாள். ஆஞ்ஞை எனும் ஈரிதழ் தாமரையில், ஒருபக்கம் ஹம்சவதி தேவதையும், இன்னொருபக்கம் ஷமாவதி தேவதையும் பரிவார தேவதைகளாக இருந்து ஹாகினி தேவதைக்கு தொண்டு செய்கிறார்கள்.




சக்கரங்களில் இறுதி சக்கரமாக ஆஞ்ஞை இருந்தாலும், இது குண்டலினி சக்தியின் முடிவான உறைவிடம் அல்ல. அதனால் தான் நமது ஞானிகள் இதற்கு ஆஞ்ஞை என்று பெயரிட்டார்கள். அப்படி என்றால், சிறிது வெளிப்படுதல் என்பது பொருளாகும். அதாவது குண்டலினி சக்தி தான் இன்னார் என்றும், தனது சக்தி இன்னதென்றும் ஒரு சிறிது நேரம் வெளிப்படுத்துவதற்கே இந்த சக்கரம் துணை செய்கிறது.

இதை தொட்டுவிட்ட குண்டலினி, மனித முயற்சி இல்லாமலே இறைவனின் கருணையால் ஆயிரம் இதழ்கொண்ட தாமரையின் வடிவமான சகஸ்ரத்தை அடைந்து தனது பயணத்தை முடித்து கொள்கிறது.

குண்டலினி சக்தி சகஸ்ரத்தை தொடும் நிகழ்வை வைதீகர்கள் சொர்க்கம் என்கிறார்கள். சித்தர்களும், ஞானிகளும் முக்தி என்கிறார்கள். கௌதம புத்தர், மகாவீரர் போன்ற அவாதார புருஷர்கள் பரிநிர்வாணம் என்கிறார்கள். எந்த பெயரிட்டு அழைத்தாலும், அந்த நிகழ்வு இறைவனும் மனிதனும் ஒரே நேர்கோட்டில் வருகின்ற நிகழ்வாகும். அதாவது எலும்பும், சதையும் கொண்ட மனிதன், நேருக்கு நேராக இறை தரிசனத்தை பெறுகிறான் அல்லது இறைவனை உணர்கிறான் எனவே குண்டலினியின் சகஸ்ர நிகழ்வு விரிவாக பார்க்க கூடியது.



எனவே இறை தரிசனத்தின் முழுமையான இரகசியத்தை உணர்வதற்கு முன்பு, அதை பெறக்கூடிய மனிதனின் தத்துவப்பூர்வமான வாழ்க்கை எப்படி இருக்கும், எப்படி அமையவேண்டும் என்பதை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். எனவே சித்தர்களின் தத்துவங்களுக்கு மத்தியில் சஞ்சாரம் செய்து, அதன்பிறகு சகஸ்ர அனுபவத்தை உணர்ந்து கொள்வதே சரியான மார்க்கமாகும். அதனால், இதுவரையில் அதிகமாக பேசப்படாத சித்தர் தத்துவத்தின் மிக நுட்பமான பகுதிகளை நமது சிற்றறிவு கொண்டு அறிய முயற்சிப்போம்.

யோகி
ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு
கொள்ளவும்
போன்:
09442426434







மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் எதுமில்லை




Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...

# காத்யாயனி

வெள்ளிக்கிழமை காத்யாயனி தேவிக்கு நடை பெற்ற சிறப்பு வைபவத்தில் காத்யாயினி அம்பாள் குறித்த ஸ்ரீ மஹா பெரியவா அருளமுதம்.

பர்வதராஜ புத்திரியாக வந்த அம்பாளும், க்ஷீரசாகரத்திலிருந்து பிறந்த மஹாலக்ஷ்மியும், இரண்டு மஹரிஷிகளுக்குப் பெண்களாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

மஹாலக்ஷ்மியை மகளாகப் பெற்று, சீராட்டி வளர்க்க வேண்டும் என்று பிருகு மஹரிஷி தபஸ் செய்தார். அதற்கிணங்கவே லக்ஷ்மிதேவி அவருக்குப் புத்திரியாக உத்பவித்தாள். பிருகுவுக்குப் புத்திரியானதால் அவளுக்கு பார்கவி என்று பெயர் ஏற்பட்டது. ‘பார்கவி லோக ஜனனி க்ஷீரஸாகர கன்யகா’ எனறு ஸம்ஸ்கிருத அகராதியான ‘அமர கோசம்’ சொல்லும்.



இப்படியே காத்யாயன மகரிஷி சாக்ஷாத் பரமேசுவரியைப் பெண்ணாக அடைய வேண்டும் என்று விரும்பித் தபஸ் செய்தார். அம்பிகையும் அவருக்கு மகளாக ஆவிர்பவித்தாள். காத்யாயனருக்குப் பெண் என்பதாலேயே அவளுக்குக் காத்யாயனி என்ற பெயர் உண்டாயிற்று. துர்க்கைக்கு உரிய காயத்ரியிலே அவளைக் ‘காத்யாயனியாக தியானிக்கிறோம்’ என்று சொல்லியிருக்கிறது.

லோக மாதாக்களாக இருக்கப்பட்ட தெய்வங்களைக் குழந்தையாக வரச் சொன்னதில் நிரம்ப விசேஷம் இருக்கிறது. ‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே’ என்கிறோம். தெய்வமே குழந்தையாக வந்தால், ரொம்பக் கொண்டாட்டமாகும்.

குழந்தைக்கு நம்மைப் போல் காமமும் குரோதமும் துக்கமும் வேரூன்றி இருப்பதில்லை. இந்த க்ஷணத்தில் ரொம்பவும் ஆசைப்பட்ட ஒரு வஸ்துவை அடுத்த க்ஷணத்தில் தூக்கிப் போட்டுவிட்டுப் போகிறது. கோபமும் இப்படியே சுவடு தெரியாமல் நிமிஷத்தில் மறைந்து போகிறது. அழுகையும் இவ்வாறேதான்.

நாம்தான் உணர்ச்சிகளை ஆழ உள்ளுக்கு வாங்கிக் கொண்டு மனத்தைக் கெடுத்துக் கொள்கிறோம்.

உணர்ச்சிகள் வேரூன்றாமல் குழந்தைகள் போல் நாமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இதனால்தான் உபநிஷதமும் ‘குழந்தையாய் இரு’ என்கிறது.

சாக்ஷாத் பராசக்தியைக் காத்யாயனியாகவும், மஹாலக்ஷ்மியை பார்கவியாகவும்குழந்தைகளாக்கி,அந்த பாவத்திலேயே வழிபட் டால், நமக்கும் குழந்தைத் தன்மை சாக்ஷாத் கரித்துவிடும். இந்த நாளில் வாட்டர்ஃப்ரூப் என்று சொல்வதுபோல், நாம் காம ப்ரூஃப், சோக ப்ரூஃப் எல்லாமாக,சாந்தமாக ஆவோம். குழந்தை ரூபத்தில் இருந்தாலும் ஞானப் பாலூட்டும் ஸ்ரீமாதாவாக இருக்கிற தேவி, நமக்கு இந்த அநுக்கிரகத்தைச் செய்வாள்.

குழந்தையாக வந்த காத்யாயனியைத் தமிழ் நாட்டுக் கிராம ஜனங்கள்கூட நீண்ட காலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது என் ஊகம். ‘காத்தாயி’ என்று சொல்கிற கிராம தேவதை காத் யாயனிதான் என்று நினைக்கிறேன்.

தொகுப்பு:
பெரியவா குரல்



காத்யாயனருக்கு மகளாக பிறந்ததாள் அவளுக்குக் காத்யாயனி என்ற பெயர் ஏற்பட்டது

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# அஷ்ட புஷ்பங்கள்

புஷ்பங்கள் பற்றி ஆகமங்களும் புஷ்பவிதி என்ற நூலும் விவரமாகச் சொல்லியிருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் இன்ன இன்ன புஷ்பங்களை சுவாமிக்குச் சார்த்த வேண்டிய காலம் பற்றியும் கூட சொல்லியிருப்பதைக் காண லாம். தோஷமில்லாத, அதாவது பூச்சி அரிக்காத, எச்சம் இடப்படாத விடியற்காலத்தில் பறிக்கப்பட்ட புஷ்பங்களால் பூஜை செய்வது விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதைத்தான் "நன் மாமலர்" என்று ஞானசம்பந்தர் பாடுகிறார்.

இனி, அஷ்ட புஷ்பங்கள் எவை என்று பார்ப் போம்.

**புன்னை, சண்பகம், பாதிரி, வெள்ளெருக்கு, நந்தியாவர்தம், அரளி, நீலோத்பலம், தாமரை** என்பனவே அஷ்டபுஷ்பங்களாக பூஜைக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இவற்றில் பெரும்பாலும் நந்தியாவர்தம், அரளி ஆகியவை வீடுகளிலேயே வளர்க்கப்படுகின்றன. இவற்றைத் தவிரவும், மல்லிகை,முல்லை, பாரிஜாதம், மயில் கொன்றை, விருக்ஷி போன்ற புஷ்பச் செடிகளையும், வில்வ மரத்தையும் வீடுகளில் பூஜைக்காக வளர்ப்பது உண்டு.

## புன்னை

இம்மரம் பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளில் காணப்படுவது. மயிலாப்பூரில் புன்னை மரத்தின் நிழலில் கபாலீச்வரர் வீற்றிருப்பதை, "மட்டிட்ட புன்னையங்கானல்" என்று துவங்கியபடி பதிகம் பாடுகிறார் சம்பந்தர். இக்கோயிலில் புன்னை மரம் ஸ்தல விருக்ஷமாக இருக்கிறது. பசுமையான இலைகளையும் வெள்ளை நிறம் கொண்ட பூக்களையும் கொண்டது இம்மரம். இதில் கோடைக்காலத்தில் பூக்கள் அதிகமாக இருக்கும்.

## சண்பகம்

வாசனை மிக்க இம்மலர்கள் சித்திரை முதல் புரட்டாசி வரை பூக்கக் கூடியவை. இம்மரத்தின் இலைகளும் பசுமையாக இருப்பவை. செண்பகவல்லி என்று அம்பாளுக்கும் சென் பகாரன்யேச்வரர் என்று சுவாமிக்கும் பெயர்கள் வழங்குவதைப் பார்க்கலாம்.

பாதிரி: நீண்ட மலர்களைக் கொண்ட பாதிரி மரம் உயரமாக வளரக்கூடியது. இம் மலர்கள் வாசனையானவை. இதனைத் தல விருக்ஷமாகக்கொண்ட ஸ்தலம் திருப்பாதிரிப்புலியூர் ஆகும்.

## வெள்ளெருக்கு

வெள்ளெருக்கும் பாம்பும் சுவாமியின் ஜடையில் விளங்குவதை, "வெள் ளெருக்கு அரவம் விரவும் சடை" என்று அப்பர் தேவாரம் குறிப்பிடுகிறது. முதலில் சிறிய செடியாக விளங்கி , சிறிய மரமாகவும் வெள்ளெருக்கு வளர்ச்சி பெறுகிறது. வெண்மை நிறம் கொண்ட இம்மலர்கள் ஆண்டின் பல மாதங்களில் பூக்கக் கூடியவை. எருக்கத்தம்புலியூர் என்ற சிவ ஸ்தலத்தில் இம்மரம் விருக்ஷமாக விளங்கு கிறது.





நந்தியாவர்தம்: நந்தியாவட்டை என்று பேச்சு வழக்கில் சொல்லப் படுவது. வருடம் முழுவதும் பூக்கக் கூடியது. வெள்ளை நிறம் கொண்ட இம்மலர்களை மாலையாகவும் அர்ச்சனைக்கும் பயன் படுத் துவர்.

## அரளி

இதுவும் மாலைகளில் பயன்படுத்தப்படுவது. அர்ச்ச னைக்கும் பயன்படுத்துவர். அநேகமாக ஆண்டு முழுவதும் பூப்பதால் நந்தவனங்கள் மற்றும் வீடுகளில் இச்செடியை வளர்க்கிறார்கள்.

## நீலோத்பலம்

நீர்நிலைகளில் வளரக்கூடியது. இதைக் குவளை என்றும் சொல்வர். கண்க ளுக்கு இதை உதாரணம் காட்டுவார் கள். "குவளைக்கண்ணி " என்று அம்பாளைத் திருவாசகம் குறிப் பிடுகிறது. திருவாரூரில் அம்பா ளுக்கு, நீலோத்பலாம்பிகை என்று பெயர்.

## தாமரை

தாமரையில் மகா லக்ஷ்மி வாசம் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. இத் தாமரை மலர் குளங்களிலும் நீர் நிலைகளிலும் வளர்வதைக் காணலாம். ஆயிரம் தாமரை மலர்களால் திருவீழிமிழலையில் மகாவிஷ்ணு சிவ பூஜை செய்து சக்கரம் பெற்றதாக அந்த ஊர்ப் புராணம் சொல்கிறது. அதற்காகவே பஞ்சாக்ஷர சஹஸ்ரநாமம் சொல்லி அர்ச்சனை செய்தாராம் விஷ்ணு.

ஊமத்தை, மந்தாரை, மகிழம்பூ, போன்ற புஷ்பங்களையும் ஈச்வரன் ஏற்றுக்கொள்கிறான். இருந்தாலும் மேலே சொன்ன அஷ்ட புஷ்பங்களே மிகவும் உயர்வாகக் கூறப்படுகின்றன. இந்த "எட்டு நாண்மலர்" கொண்டு ஈசனது பாதாரவிந்தங்களுக்கு அர்ச்சித்தால் எல்லாப் பாவங்களும் நீங்கும் என்று அப்பர் தேவாரம் நமக்கு உணர்த்துகிறது.

ஸ்ரீ பரமேச்வரனது பாதங்களோ இயற்கையிலேயே வாசனை மிக்கவை. அம மலர்ப் பாதங்களுக்கு மலர்களால் அர்ச்சிக்கிறோம். "நறுமலராய் நாறும் மலர்ச் சேவடி" என்று இதைக் குறிப்பிடுவார் அப்பர் ஸ்வாமிகள். இப்படி இயற்கையிலேயே மணம்மிக்க பாதங்களைச் சுற்றி ரீங்காரம் செய்கின்றனவாம் வண்டுகள். ஆகவே, "வண்டினங்கள் சூழ்ந்த அடி" என்பார் அப்பர் பெருமான்.

முருக நாயனார் திருப்புகலூர் வர்தமாநீச் சரத்தில் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தவர். பக்தியையும் கூடவே பகவானுக்கு மாலையாகச் சார்த்தி மகிழ்ந்தவர். அந்த ஊர்ப் பதிகத்தில் முருக நாயனாரது இத்தொண்டு திருஞான சம்பந்தரால் போற்றப்படுகிறது.

அத்தகைய மலர்ப்பாதங்களை நாமும் அஷ்ட புஷ்பங்களால் அர்ச்சித்து சஞ்சித வினைகள் நீங்கி, பிறப்பு இறப்பு இல்லாத நிலையை அடைவோமாக





ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# மனிதனின் மூளையின் உள்ளுணர்வே கடவுள்

❖❖❖

சிறிது சிறிதாக சக்திபெறும் தன்மையைக் கொண்டு மனிதனுடைய மூளை கருவியாக சிந்திக்கிறது என்பதனால் மூளை ஒரு தொடர்சிந்தனை செய்யும் கருவியாகும். இச்சக்தியை அது பெற்றிருப்பதனால் தான் திணிக்கப்படுகின்ற கொள்கைகள் மூளையுள் சென்று அதை திடீரென்று தாக்கி சிந்திப்பதை சற்று நிறுத்தி யோசிக்கிறது. முடியவில்லை என்றால் அதுவே மனிதனை கீழ்நிலை என்ற தன்மைக்கு தள்ளி ஏன் இப்படி சொல்லியிருக்கிறார்கள், எதனால் என்று மதத்திற்குள் புகுந்து ஆராய்கிறது.

❖❖❖

துல்லியமான மேம்பாட்டுச்சிந்தனை உடையவர்கள் பொதுவாக எல்லா மதங்களிலும் இருக்கிறார்கள். அதுபோல இந்துமதத்திலும் இருக்கிறார்கள். அதனால் ஒவ்வொருவரும் எதையும் சிந்திக்க வேண்டும். புத்தமதத்தில் இத்தகைய கொள்கை ஒரு மூலக்கொள்கை அல்ல. அதனால் நான் எல்லா சமயங்களிலும் பகவான் புத்தனைத் தொழுகின்றேன்.

❖❖❖

எல்லா மதங்களிலும் உள்ள துறவிகள் யோகிகள் நல்லவைகளையே பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த தன்மையில் எல்லா மதங்களும் எல்லா பிரச்சாரங்களும் ஒரு அடிப்படையில் ஒன்றாகவே இருக்கிறது.

❖❖❖

சமயத்தின் மூலாதாரக்கொள்கை அடிப்படைவாதமாகும். எனது கேள்வி என்னவென்றால் இந்த மூலத்தை யார் எழுப்பினார்கள்? அதற்கு ஆசிரியர் யார் என்பதே. முடிந்தால் எளியவனுக்கு புரியும்படியாக சொல்லிவிட்டு எவரும் அடிப்படைவாதத்தைத் தொடரலாம். இது கட்டாயமல்ல. எனது வேண்டுகோளே.

❖❖❖

ஆண்டவனின் ஒரு அடிப்படைவாதம் என்பது இறைவனே ஐந்து பூதங்களாக இருக்கிறான் என்பது. அடுத்த அடிப்படைவாதம் கடவுளுக்கு நல்ஆவி என்ற உணர்வுத்தன்மை இருக்கிறது என்பதாகும். இது அடுத்த அடிப்படைத்தன்மை. இதற்கு அடுத்தது மனிதனின் மூளையின் உள்ளுணர்வே கடவுள் என்பதாகும். இதுவும் ஒரு அடிப்படைவாதம். இப்படித்தான் அடிப்படைவாதங்கள் உருப்பெற்றன.

❖❖❖

யுகத்திற்கு யுகம் சுதந்திரமாக சிந்திக்கும் தன்மை உடைய பெருவாரியான மக்கள் இந்துமதத்திலும் இருந்தார்கள். இதனால் இந்துமதத்தில் பல்வேறுவிதமான கொள்கைகளும், பல்வேறுவிதமான சிந்தனைகளும் ஒரு சிறிய அளவு அடிப்படைவாதமும் இருந்திருக்கிறது. இது இன்றும் உலகில் நிகழ்ந்து வருகின்ற நிகழ்ச்சியாகும்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஆதர்ச ஆளுமையை வளர்த்துக் கொள்வதன் அவசியம்

தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்விதமான கடினமான சூழ்நிலையிலும் மனதின் சமநிலை குலையாமல் இருப்பதற்கும், அதை தைரியமாக எதிர்கொள்வதற்கும், அத்துடன் ஒவ்வொரு காரியமும் ஆதர்சமாக நடப்பதற்கும் ஒருவரின் மனோபலம் மிக உத்தமமாகவும், ஆளுமை ஆதர்சமானதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஒருவரின் ஆளுமை குறைகள், அவரின் மனோபலம் குறைய காரணமாகிறது. ஆனால் அவரிடமுள்ள குணங்கள் அவரின் ஆளுமை ஆதர்சமாக மாறுவதற்கு உதவுகிறது. அதனால் ஆதர்ச ஆளுமையை வளர்த்துக் கொள்ள ஒருவர் தன்னுடைய ஆளுமை குறைகளைக் களைந்து நற்குணங்களை மேம்பட செய்வது அவசியமாகிறது. இக்கட்டுரையில் ஒருவரிடமுள்ள சில ஆளுமை குறைகளைக் களைவதற்கு செய்ய வேண்டிய முயற்சிகள் பற்றிய வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

### 1. சுக வாழ்வு வாழ்வதற்கு பெரும் தடையாக இருக்கும் ‘ஆளுமை குறைகள்’

‘மன ஏவ மனுஷ்யாணாம் கார ணம் பந்தமோக்ஷயோ:’ என்ற வசனப்படி மனமே மனிதனை பந்தப்படுத்தும் (பிறப்பு இறப்பு சக்கர சுழற்சியில் மாட்ட வைக்கும்) அல்லது மோக்ஷத்தை (பிறப்புஇறப்பு சக்கர சுழற்சியிலிருந்து விடுபட்டு சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்தம் மற்றும் சாந்தி ஆகிய அனுபூதிகளை தினமும் அனுபவிப்பதற்கு) காரணமாகிறது. ஒருவரின் ஆளுமை குறைகள் அவரின் துக்கங்களுக்கு காரணமாகவும் அவரின் குணங்கள் அவரின் சுகங்களுக்கு காரணமாகவும் அமைகின்றன. தினசரி வாழ்வில் பல்வேறு சம்பவங்களில் நாம் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து நம்மிடமுள்ள குணகுறைகள் தெரிய வருகின்றன. ஆளுமை குறைகளால் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் போராட்டங்களும் மன அழுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உருவாகின்றன. இது போன்று அழுத்தமான சூழ்நிலை உருவாகும்போது அதன் தாக்கம் சுற்றுப்புற சூழலிலும் மற்றவரிடமும் ஏற்படுகிறது.



இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக உள்ள தன்னுடைய ஆளுமை குறை என்ன என்பதை அறிவதற்கான முயற்சி எடுக்கப்படுவதில்லை. அதனால் ஆளுமை குறைகள் அப்படியே தங்கி விடுகின்றன. இதன் பலனாக மன சாந்தி கிடைப்பதில்லை. அதனால் வாழ்வு சுகமயமாவதற்கு ஆளு மை குறைகளாகிய தடைகளை தூர விலக்குவது அவசியமாகிறது.

### 2. ஆளுமை குறைகள் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் தடையாக இருத்தல்

இறைவனை அடைய செய்யப்படும் முயற்சிகளில் அதாவது ஸாதனையிலும் ஆளுமை குறைகள் (ஆறு பகைவர்கள்) முக்கிய தடைகளாக உள்ளன. ஆளுமை குறைகளின் மூலமாக ஆறு பகை குணங்களான காம, குரோத, மோக, லோப, மத, மாச்சர்யம் ஆகியவை வெளிப்படுகின்றன. அதனால் ஸாதனையின் மூலம் கிடைக்கும் சக்தி ஆளுமை குறைகளால் ஏற்படும் தவறுகளால் செலவாகிறது. எந்த அளவிற்கு ஆளுமை குறைகள் அதிகமாக உள்ளனவோ அந்த அளவிற்கு வ்யஷ்டி மற்றும் ஸமஷ்டி நிலையில் அதிக தவறுகள் ஏற்படுகின்றன;

எந்த அளவிற்கு தவறுகள் ஏற்படுகின்றனவோ அந்த அளவிற்கு இறைவனிடமிருந்து தூர விலகி செல்கிறோம். எப்படி பாசி படிந்த நீரினுள் சூரிய கிரணங்கள் புக முடியாதோ அதேபோல் ஆளுமை குறைகளால் ஈச்வர சைதன்யத்தை உள்வாங்க முடிவதில்லை. அதனால் ஸாதகர் இறைவனிடமிருந்து விலகிப் போகிறார். இறைவனோடு இரண்டறக் கலப்பது என்பதுவே எந்த ஒரு யோக வழியில் ஸாதனை செய்யும் ஸாதகரின் லட்சியமாக உள்ளது.

எப்படி ஒரு துளி எண்ணெய் தண்ணீருடன் கலக்காதோ அதேபோல் ஆளுமை குறைகளைக் களைந்து குணங்களை வளர்த்துக் கொள்ளாமல் ஸாதகரால் சகல கல்யாண குணங்களின் உறைவிடமாகத் திகழும் இறைவனுடன் ஒன்ற முடியாது.

அதனால் ஸாதனையில் தடையாக உள்ள ஆறு பகை குணங்களை வென்று இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு ஆளுமை குறைகளைக் களைந்து குணங்களை வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

**3. ஸாதனையில் ஆளுமை குறைகளைக் களையும் முயற்சியையும் சேர்த்துக் கொள்வ தன் இன்றியமையாத தன்மை**

ஸாதனை செய்வதால் ஆளுமை குறைகள் தானே விலகி விடும் என்று சிலர் நினைக் கின்றனர். தத்துவ கண்ணோட்டத்தில் இது தவறில்லை என்றாலும் செயல்முறையில் இது நடக்கும் என்ற உத்தரவாதம் இல்லை.

ஸாதனை செய்வதன் நோக்கம், இறைவனை அடைய ஆர்வம், அந்தக்கரணத்தில் இறைவன் மீது ஏற்பட்டுள்ள கேந்திரம், செயல்முறை ஸாத னை ஆகிய பல விஷயங்களைப் பொருத்தே இது அமைகிறது. ஸாதனையின் நோக்கம் ஆறு பகை குணங்களைக் களைவது ஆகும். அதாவது எல்லா விதங்களிலும் செயல்எதிர் விளைவு ஆகியவற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் ஆகும்.

இருந்தாலும் ஆளுமை குறைகள் என்பவை சித்தத்தில் ஜன்மஜன்மாந்திரமாக பதிந்துள்ள ஸன்ஸ்காரங்கள் என்பதால் மிக ஆழமாக பதிந்துள்ள அவற்றை நீக்குவது என்பது சுலபமல்ல. ஸாதனையில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டு மனோலயம் புத்திலயம் ஏற்படும் வரை அதாவது சித்தத்திலுள்ள ஸன்ஸ்காரங்கள் அழிக்கப்படும் வரை மனமும் புத்தியும் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

அதனால் ஆளுமை குறைகளும் செயல் பட்டுக் கொண்டே இருக்கின்றன. மனதில் ஏற்படும் எதிர்மறையான எண்ணங்கள் மற்றும் விகல்பங்களால் ஸாதனையின் மூலம் ஆனந்தம் கிடைக்காமல் ஸாதகர் மனதளவில் மாட்டிக் கொள்கிறார். அதனால் 'ஸாதனையின் மூலம் ஆளுமை குறைகள் தானே விலகி விடும் என்று எண்ணாமல் ஆளுமை குறைகளைக் களைவதற்கு அயராத முயற்சி எடுப்பது இன்றியமையாததாகிறது.

**4. ராஷ்ட்ரத்தின் பரிதாபகர நிலையை சரி செய்வதற்கு நல்ல ஸன்ஸ்காரங்கள் உள்ள சமூகம் அவசியமாகிறது**

தனி மனிதன் மற்றும் சமூகத்தின் நலன் பரஸ்பரம் இருவரையும் சார்ந்து உள்ளது. தனி மனித வாழ்வில் சமூக நிலையின் பாதிப்பு ஏற்படுகிறது. அதனால் தனி மனித நலனை கருத்தில் கொள்ளும் போது சமூக நலன், தேச நலன் ஆகியவற்றையும் கருத்தில் கொள்வது அவசியமாகிறது. இன்றுள்ள சமூக அமைப்பில் பல துர்குணங்கள் அதிக அளவில் கோலோச்சுகின்றன.



இதை நாம் தினசரி வாழ்வில் அனுபவிக்க முடிகிறது. பாரதத்தில் அரசியல்வாதிகள், பொதுமக்கள், அதிகாரிகள் மற்றும் தார்மீக தலைவர்கள் ஆகிய நான்கு முக்கிய சமூக அங்கத்தினர்கள் இடையே ஆளுமை குறைகள் மிகுந்து காணப்படுகிறது.

அதனால் வெறும் அரசுத் துறைகளில் மட்டுமல்ல, சமூக, நீதி, கல்வி ஆகிய அனைத்து துறைகளிலும் சிறிதளவோ பெரிதளவோ தரம் தாழ்ந்துள்ளது. அனைத்து தேசவாசிகளும் தர்மம் மற்றும் நீதியை மறந்துள்ளனர். பெருமளவு நடக்கும் தர்ம நிந்தனையால் தேசம் இத்தகைய தாழ்ந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சமூகத்தை நல்ல நிலைக்கு கொண்டு வர ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள தீய குணங்களைக் களைந்து நல்ல குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது சமூக அங்கத்தினர் ஒவ்வொருவரின் கடமையாகிறது. சமூகத்தை நல்வழிப்படுத்தவும் சமூகத்தினிடையே ஒற்றுமையைக் கொண்டு வரவும் ஆளுமை குறைகளைக் களைதல் மற்றும் குணங்களை வளர்த்துக் கொள்ளுதல் அத்தியாவசியமாகிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626



# மூன்றுவேளை மூன்றுவிதமாக மாறும் காயத்ரி மந்திரம்

ஓம் பூர்: புவ: ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ: யோந: ப்ரசோதயாத்..!

பூர், புவ, ஸுவ எனும் மூன்று லோகங்களையும் படைத்த ஒளி பொருந்திய, வணக்கத்திற்குரிய சக்தியை தியானிக்கிறோம். மேலான உண்மையை உணர அந்தப் பரம்பொருள் எங்களது அறிவை மேம்படுத்தட்டும் என்ற பொருளைக் கொண்டது.

இதை தினசரி ஜபித்து வந்தால் பூர்வ ஜென்ம பாவங்கள் அகலும். சக்திகள் பெருகும். வைராக்கியம் உண்டாகும். காயத்ரி என்பதற்கு தன்னை ஜபிப்பவனைக் காப்பாற்றுவது என்று பொருள்.

'காயத்திரி' என்னும் ஒலியின் அளவைக் கொண்டு இந்த மந்திரம் இயற்றப்பட்டதால் இதற்கு"காயத்திரி மந்திரம்" என்ற பெயர் ஆயிற்று.

காயத்ரி மந்திரம் குரு மந்திரம், மகா மந்திரம் என்று போற்றப்படுவது. ராஜரிஷி விசுவாமித்தி ரரால் வழங்கப்பட்ட இது, மந்திரங்களின் தாய் என்ற பெருமையைக் கொண்டுள்ளது. கீதையில் கிருஷ்ண பரமாத்மா 'மந்திரங்களில் நான் காயத்ரி மந்திரம்' என்றே குறிப்பிட்டுள்ளார். மனித குலம் முழுமைக்கும் சொந்தமான இந்த மந்திரம் சக்தியைக் குறித்து வியந்து பாடப்பட்டது. ரிக் வேதத்தின் மூன்றாவது மண்டலத்தின் பாடலாக உள்ள இந்த மந்திரம் சாவித்ரி மந்திரம் என்றும் கூறப்படுகிறது. இந்த மந்திரத்தின் பெருமையால் பிறகு ஒவ்வொரு கடவுளருக்கும் தனித்தனியே காயத்ரி மந்திரம் உருவாகத் தொடங்கியது. இதை ஜபித்து வர எல்லாவித ஆபத்துக் களும் நீங்கும். மற்ற எல்லா மந்திரங்களுக்கும் தாய் போன்றவள் காயத்ரி. இதனை ஜெபித்தால் இந்த ஜென்மத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவம் அகலும்.

காயத்ரி என்ற மந்திரத்திற்கு சாவித்ரி என்றும் சரஸ்வதி என்றும் பெயர்கள் உண்டு. இந்த மந்திரம் காலையில் காயத்ரிக்காகவும், நடுப்பகலில் சாவித்ரிக்காகவும், மாலை சந்தியா வந்தனத்தில் சரஸ்வதிக்காகவும் ஜபிக்கப்படுகிறது.

காயத்ரி மந்திரம் ஜபிக்கப்பட்ட பின்னரே மற்ற மந்திரங்கள் ஜபிக்கப்படுகின்றன. மந்திர வழிபாட்டில் காயத்ரிக்குத் தான் முதல் இடம். காயத்ரி ஜபம் செய்யாத எந்த ஜபமும், ஆராதனையும் பயனற்றது.



மாதந்தோறும்
2 இதழ்களாக வெளிவரும்
# ஆன்மிகமலர் மெயில்புத்தகம்
விரைவில்...



# 3 இதழ்களாக
வெளிவரவிருக்கிறது

எங்களுடன் இணைந்து
இதழை வழிநடத்தி செல்ல
## விருப்ப சந்தாவில்
இணைந்து இதழுடன் பயணியுங்கள்
விவரங்களுக்கு: 08825844033